உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு

துணர் ௧௪. { வெகுதானிய, ஐப்பசி } மலர் ௭

க.	சர்க்கரை முத்துமுருகப்புலவர் *சர்க்கரை. இராமசாமிப் புலவர் அவர்கள்*	243
உ.	வள்ளல் மலையமான் திருமுடிக் காரி *திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்*	251
௩.	யசோதர காவியம்—புத்துரை *திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்*	258
௪.	பள்ளியகரப் பழங்கதை	266
ரு.	தமிழ்ச்செய்திகள்	277
௬.	ஒருவேண்டுகோள் *பொழிற்றொண்டர்*	282

செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கருந்திட்டாங்குடி.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௪	வெகுதானிய, ஐப்பசி	மலர் ௭

சர்க்கரை முத்துமுருகப்புலவர்

சர்க்கரை, இராமசாமிப் புலவர் அவர்கள்

இப்புலவர்பெருமான் இராமநாதபுரம் அரசியற் புலவராகவிருந்த இரண்டாவது சர்க்கரைப் புலவரின் மூன்றாவது குமாரராவார். இவருக்கு முன்னவர் மயூரகிரிக் கோவை பாடிய சாந்துப்புலவரும், துறைசைத் திருச்சிற்றம்பலதேசிகர் மேற்கோவை நாலியற்றியதன்றி அந்த ஞானதேசிகர் திருவடித் தொண்டுபூண்டு சமய விசேட நிருவாண தீக்கையும் ஞானோபதேசமும்பெற்றுக் கலம்பகமும்பாடிச் சிவயோகச் செல்வராக விளங்கிய சீனிப்புலவரும், திருச்செந்தூர்ப் பரணியும் புகையிலைவிடு தூது மியற்றிய சீனிச் சர்க்கரைப் புலவரும், உய்ய வந்த புலவருமாவர்.

மிழலைச் சதகத்தைப் பாடியவர் இச்சர்க்கரை முத்து முருகப்புலவரே. 'மிழலைச்சதகத்தைச் சர்க்கரையோதினனே' எனப் பாயிரச் செய்யுளிருப்பினும் மிழலைச் சதகம் பாடிய தற்கு மிழலைக் கூற்றத்து வேளாண் செல்வர்கள் கொடுத்த மக மைப் பட்டயம் முத்து முருகப் புலவர் பாடினாரென்று தெரி விப்பதால் எங்கள் குடும்பத்துக்குரிமையாய் வழங்கும்சர்க்கரை என்னும் தலைமைப்பெயரால் இவர் பாராட்டப்பட்டனர் போலும்.

இந்தச் சர்க்கரை முத்துமுருகப் புலவர் சொற்சுவை பொருட்சுவைபெறச் செய்யுளியற்றும் ஆற்றலுடையவர் என்ப தற்கு இவராற் பாடப்பெற்ற மிழலைச்சதகமே போதியசான்று பகரும். அவற்றுள் இரண்டு செய்யுள் தருதும்.

அடுக்கப் படிக்கின்ற செந்தமிழ்ப் பாவல ராரினையுந்
தடுக்கப் படிக்கின்ற கல்விகல் லாரிந்தத் தாரணிமேற்
கொடுக்கப் படிக்கின்ற கல்விநன் றூய்வந்து கூடியபின்
நடக்கப் படிக்கின்ற நாட்டார் மிழலை நராதிபரே.

ஆழி நடக்கும் பரிதேர் நடக்கு மறுமுகனூர்
கோழி நடக்கும் பசுவே றுவணக் கொடிநடக்கும்
வாழி நடக்கு மிழலைநன் னாட்டு வரம்புடையார்
மேழி நடக்கி னடவாத தொன்றில்லை மேதினிக்கே

இப்பாடல்களின் சொன்னயமும் பொருளாழமும் படிப் போருள்ளத்தைக் கவர்வனவாம்.

இவர் பழைய திவாகரம் பன்னிரண்டு தொகுதியையும் திருத்தியும் விளக்கியுங் கூட்டியும் புதுக்கியும் பொருள் விளக் கம் எனப் பெயர்தந்து உதவியுள்ளார்.

இது " தலம்புகழ் *நாகைச் சர்க்கரைப் புலவன்
நலம்புகழ் தியாக ராசமெய்க் குருவை
நித்தலுந் துதிக்கு நிறைமதிப் புகழான்
முத்துமுரு கக்கவி மொழிந்திட வந்த
இப்பொருள் விளக்க வியல்பெலா மறிந்தோர்
முப்பொருள் விளக்க முடிபெலா மறிவார் "

---

* சர்க்கரைப்புலவர் முதலானோர் கடார முதலியவூர்களிலிருந்தவர்என்பது.
"பஞ்சவனு கியபாண்டி யன்றன்றேசம் பலவற்று ளேசேது பதிமன்சீமை
மஞ்சுலவு காவளருங் கடாரநாகை வளரோரூர் சிறுகம்பை யூரில்வாழ்வோன்
மிஞ்சுபுக ழிராமாய ணப்பிரசங்கி விருதுநெட்டி மாலையுஞ் சிவிகையும்பெற்
தஞ்சமென்றே யாதிரத்தி னேசர்பேரிற் றமிழலங்காரச் சித்ரகவி [றோன்
என்பதனாற் றெரிகிறது. [செய்தானே"

என்பதனுற் புலனும். இவருக்குத் தமிழாசிரியர் இவர் தந்தை முதலியோராகவிருக்கவும் இப்பாயிரத்தில் இவருடைய குருவாகக் கூறப்பட்ட தியாக்ராச மெய்க்குருவாவார் ஞானதேசிகரென்க.

மேற்கண்ட ஆசிரியப்பாவில் சர்க்கரைப்புலவன் என்றும் முத்துமுருகக்கவி என்றும் கூறியிருப்பதையும் மிழலைச்சதகப் பட்டயம் முத்துமுருகப் புலவருக்கு என்றும் மிழலைச் சதகத்தைச் சர்க்கரையோதினனே என்று மிருப்பதையும் நோக்கின் இவர்க்கு இருபெயரு முண்டென்று தெரிகிறது.

இப்புலவர் பெருமான் முத்துராமலிங்க சேதுபதி காலத்திய மந்திரி முத்திருளப்பபிள்ளையவர்களின் பெருமதிப்பைப் பெற்றவர். ஒருக்கால் முத்திருளப்பப்பிள்ளையவர்கள் வடக்கு வட்டகையிலுள்ள கோட்டைப்பட்டினம் சேதுமார்க்கத்திலுள்ள சத்திரம் பார்க்கவந்த பொழுது அவரைப்பார்க்கக் கோடகுடியிலிருந்து சென்ற இப்புலவர் எழுதிய ஓலைத்தூக்கு

சித்திரகவி மதுரகவி நாகபந் தக்கவிகள்
செப்பு கவி வர்க்க மெல்லாந்
திரைநெடுங் கடன்மடை திறந்த தெனவே
பாடு தேசப்ர சித்த கவியாம்
முற்றுசொற் பாரத விராமாய ணம்பெரிய
முதிர் காவியக் கடலெலாம்
முழுகிமுன் னிலைகண்ட சர்க்கரைக் கவிமுத்து
முருக கவி யெழுது மோலை
சத்ரபதி சேதுபதி மந்த்ரிமுத் திருளப்ப
வுதார னெதிர் வந்து காண்க
சகலகலை யிலக்கண விலக்கியக் கடலெலாந்
தப்பாப் பிரசங்க கவியா
மெத்திசைக ளும்புகழும் ராசசமு கங்களுக்
கேத்திடு முலாமாலையாம்
இன்பநெடு வாரிதி யெழுதினே மிதுகண்
டெதிர் கொண்டு காண்க வரவே

இவ்வோலைத்தூக்கின் இறுதியடியில் இப்புலவர் உலாமாலை என்னும் பிரபந்தம் இயற்றியதாகக் கூறப்பட்டுள்ளது.

முத்திருளப்பமந்திரி இப்புலவருக்கொருசமயம் நூறு ரூபா பரிசளிக்கத் தீர்மானித்து அருகிலுள்ள எழுத்தாளரிடம்

நான் நூறுரூபா கொடுக்கச் சொன்னதாக ஒரு கிள்ளாக்கு எழுதிவாருமெனச் சொல்லியபோது நானூறு ரூபாவென்று எழுதிவந்ததைப் பார்த்ததும் மந்திரி அத்தொகையைக் கிறுக்கித் திருத்தி யெழுதிவரச் சொன்னாரென்றும் அஃதுணர்ந்த இப்புலவர்

“ஒறுக்குமதி வேந்தருக்குங்கள்ளருக்கு
நீதிதப்பி யொழுகி னோர்க்குங்
கிறுக்குவரச் செயுந்துரையே பாவாண
ரோலையினுங் கிறுக்குண் டாமோ
பொறுக்குமா சுரிமைமுத்து ராமலிங்க
சேதுபதி பூமி யெல்லாம்
நிறுக்குமதி மந்திரிமுத் திருளப்பா
வருளப்பா நிருபந் தானே”

எனவருமிப் பாடலைப்பாடி முன்னெழுதியபடி நானூறு ரூபாவையும் பரிசாகப் பெற்றனர். முத்திருளப்ப மந்திரியென்பவர் வீரைநகர்ச் சவுந்தரபாண்டியன் புதல்வரென்பதும் சிவபத்தி வாய்ந்த செல்வராய்ப் புலவருக்கெய்ப்பில் வைப்பாய் வாழ்ந்தவரென்பதும் இவரைப்பற்றி இப்புலவர்பாடிய பின்வரும் பாடல்களாற் புலனாம்.

(1) சீலங் காட்டுஞ் சிவபுண்ணி யமெலாந்
தெரிந்து காட்டிப் புவிமீது நீநெடுங்
காலங் காட்டும் புகழை யுண்டாக்கினை
கைப்பொ ருட்கங் கதுமெய்ப்பொ ருள்கண் டாய்
ஆலங் காட்டிய கண்டர்பொற் றாளிணை
யகத்திற் காட்டி யறிவுடை யோர்க்கறு
கூலங் காட்டுந்தென் சேதுப்பிர தானியே
கொற்ற வாமுத் திருளப்ப மந்த்ரியே

(2) இந்தச் சென்மத்திற் பூமண்ட லாதிக்க
மெய்தச் செய்யுஞ் சிவபுண் ணியமெலா
மந்தச் சென்மத்திற் சக்ரேசு ரன்செல்வ
மாக வேயுனக் குண்டாகுங் காண்மற்றக்
கந்தற் சென்ம மெடுத்தென்ன நீபெற்ற
கனதைச் சென்ம கிலேயான சென்மங்காண்
சொந்தச் சென்மம் பெறுமுத் திருளப்ப
சோம னேரதி மோகிக்குங் காமனே

(3) வாளை யாழியை நேர்விழி யாள்கொண்ட
மாலைக் கண்டுசெம் மாலையின் மன்மத
வேளை வந்தது மாங்குயில் கூவுது
மேவி வந்து குலாவிமுத் தாடையா
காளை வாகனர் தாள்பணி கொண்டலே
கம்பத் தானையின் றேகிவெம் போருக்கு
நாளை வாவென்ற வாராச மானிய
ராசஸ்த்ரீமுத் திருளப்ப மந்த்ரியே

வேறு

(4) கரும்புவனம் புகுந்துசிலை கையிலெடுத்
தனங்கனலர்க் கணைகொண் டான்கோங்
கரும்புவனமுலையாண்மேற் சமர்க்குவந்தான்
அவளையருட் கண்பார் வாழ்வோங்
கரும்புவன மகிழ்வீரைச் சவுந்தரபாண்
டியன்பாலா கவிசொல் யாச
கரும்புவன முகிலெனுமுத் திருளப்ப
மந்திரியாங் கல்வி மானே

(5) கோகனக வனமிவளை மதன்வளைந்தான்
கணைக்குமிலக் குவைத்தானைய
கோகனக வனமாமின் குவளையந்தா
ருதவிமுலை குழைய வேகொக்
கோகனக வனங்காட்டி யின்னமரு
வாதிருந்தான் கோப மிக்குக்
கோகன வனதருமுத் திருளப்ப
மந்திரியாங் குணம்பெற் றோனே

(6) திரக்கம்பத் தினையானை முன்செயித்தோன்
பணிதேவைச் சிவன்பா லன்பீந்
திரக்கம்பத் தினைநடத்து முத்திருளப்
பேந்த்ரனெனைச் சேரா நாளில்
திரக்கம்பத் தினையத்தந் தியின்மருப்பு
முலைகள்விம்மா திருக்கு நாள
திரக்கம்பத் தினையேனும் பயமிலா
தடரான்காற் றேரி ஞனே.

இவர் செங்காலபிள்ளை மடத்திற் றிருக்கோவில்கொண் டெழுந்தருளிய வயிரவக் கடவுளின்பேரில் பஞ்சரத்தின மொன்று பாடிப் போற்றியுள்ளார்.

(1) கொட்ட மிட்ட முடிவென்மீ தேறியோர்
கோடி கோடி பிரமாண்ட மெங்குமே
வட்ட மிட்டநின் காவலினுல்வெற்றி
மாலையிட்டயன் மாலான வாகின்றூர்
அட்ட திக்கும் புகழ்பரப் பிர்ம்மநின்
ஞணை தப்பி நடந்தவர்க் குய்வுண்டோ
மட்டு லாவுஞ்செங் காலன் மடத்தினில்
வளரு மெங்கள் வயிரவ மூர்த்தியே

(2) வஞ்ச மாகிய பூதவே தாளமு
மாறு கொண்டு வரும்பிர்ம ராட்சசும்
நஞ்ச மும்பல கோடி விலங்குநின்
ஞக்கி னைக்குள் ளடங்கிய தன்மையால்
விஞ்சை சேருயி ரெல்லாந் தழைத்திட
விதிய மைத்தனன் மேலினி யென்சொல்வேன்
மஞ்சு லாவுசெங் காலன் மடத்தினில்
வளரு மெங்கள் வயிரவ மூர்த்தியே

(3) சூலம் பாச மெறிபடை சக்கரந்
தோம ரங்கைபு லக்கை மழுத்தனு
வேலம் பேதிக ளான படையெலாம்
விரும்பி யேந்தி யகிலாண்ட மோடிந்த
ஞாலங் காக்கும் பரப்பிர்ம்ம மேயுனை
நம்பி னேனெனை யாட்கொண் டருளுவாய்
மாலன் புற்றசெங் காலன் மடத்தினில்
வளரு மெங்கள் வயிரவ மூர்த்தியே

(4) வேத மென்பது நீயந்த வேதத்தின்
விளங்கு ஞானக் கருத்துநின் முடிய
நாத னென்பது நான்கவி யென்பது
நானி லத்தி லிவைநிச மாயினுற்
கோதில் வீரப் பெருமாள்செங் காலனுக்
குரிய மைந்தர் கொடுத்தருள் செய்குவாய்
மாத வத்துச்செங் காலன் மடத்தினில்
வளரு மெங்கள் வயிரவ மூர்த்தியே

(5) பொன்னைக் காட்டிய மார்பினனுந்தியிற்
போந்த தாமரை காட்டிய வேதன்பார்
தன்னைக் காட்டின னப்பெரும் பாரெலாம்
தாங்கிக் காட்டிய மாவித் தரணியி

னின்னைக் காட்டின னீயடி யார்கட்கு
நிசத்தைக் காட்டி நிலைகாட்டிக் காக்கின்றாய்
மன்னைக் காட்டுஞ்செங் காலன் மடத்தினில்
வளரு மெங்கள் வயிரவ மூர்த்தியே.

செங்கால வீரப்பெருமாள்பிள்ளை என்பவர்க்குப் பிள்ளைப் பேறு வேண்டிப் புலவர்பெருமான் இப்பஞ்சரத்தினத்தை ஸ்ரீ வயிரவக்கடவுளுக்கணிந்தனரென்பது இதன் நாலாம் பாடலால் நன்கு பெறப்படும்.

சேதுசமஸ்தானத்தில் பலதாலுகாக்களிலும் தஞ்சை சமஸ்தானத்திலும் உள்ள சாரி மகமைகள் இவர் தந்தையார் சர்க்கரைப் புலவர் பேராலிருக்கவும் கோட்டைப்பட்டினந் தாலுகாக்கிராமங்களிலுள்ள மகமை மட்டும் இன்றும் இவர் பேரால் கொடுக்கப்பட்டு வருகிறது.

இதுகாறும் கூறியவாற்றால் சர்க்கரை முத்துமுருகப் புலவர் என்னும் புலவர் பெருமான் முத்துராமலிங்க சேதுபதி காலத்தில் அரசராலும் அமைச்சராலும் பாராட்டப்பெற்ற கவிவளம் பெற்றவராய் மிழலைச்சதகம் உலாமாலை முதலிய பிரபந்தங்களை யியற்றியும் பொருள்விளக்கம் முதலியபயிற்சி நூல்களையாக்கியும் தமிழுலகுக்குத் தொண்டாற்றிப் புகழ் பெற்றவரென்பது போதரும்.

உ

மிழலைக் கூற்றத்து மகமைப் பட்டயம்.

சாலிவாகனசகாப்தம் ௲௬௱அ௰௨ கலியாப்தம் ௪௲அ௱ ௯௰௧ இதின்மேற் செல்லாநின்ற விக்கிரமஞு மாசிமீ ௰௯௨ திருமிழலை நாட்டுப் பிள்ளைமார் சர்க்கரைப் புலவர் குமாரர் முத்துமுருகப் புலவருக்கு மகமைப் பட்டயம் பண்ணிக் கொடுத்தபடி மிழலை நாட்டுச் சதகம்பாடி நாட்டுப்பிள்ளைமார் பேரில் அரங்கேற்றினதற்குச் செங்காலபிள்ளை நாட்டுப்பிள்ளை மார் உள்ளிட்டாரும். ஆத்மசந்தோஷமாக மாத்தால் குறுணி வீதம் மகமைப் பட்டயம் பண்ணிக் கொடுத்தோம்.

வெள்ளாம் பத்தில்.......................பண்டாரவாடைக் கிராமம். சருவமானியக்கிராமம். அர்த்தமானியக்கிராமம். சுரோத்தியக்கிராமம். கோவிற்கிராமம். இந்த கிராமத்துக் கெல்லாம் மாத்தால் குறுணிவீதம் மகமை என்றைக்கும் கொடுத்து நடத்து விப்போமாகவும். இந்தப்படிக்குப் பொன் பேத்திச் செங்கால சிரங்கபிள்ளை, வீரப்பெருமாள்பிள்ளை, தீராவிணை தீர்த்தபிள்ளை, திருவப்பிள்ளை, தியத்தூர்ப் பெருமாள் பிள்ளை, குளத்தூர்ச் சீரங்க பிள்ளை, களபம் வீரப் பெருமாள்பிள்ளை, ஆவணம் வெழுவுப் பிள்ளை, பெரியணு பிள்ளை, அமரடக்கி வீரப்பெருமாள் பிள்ளை, கோலேந்திரம் சின்னுப்பிள்ளை, வேங்கப் பிள்ளை, தாளனூர் கொண்டா பிள்ளை, அடைக்கலங்காத்த பிள்ளை, பாக்கம் மணவாள பிள்ளை, மீன் புசல் செய்யானம் குஞ்சுப் பிள்ளை, மணவாள பிள்ளை, வீரப் பெருமாள் பிள்ளை, ரெட்டைகுளம் மணிக்கட்டியா வீரப் பெருமாள் பிள்ளை, விளத்தூர் உலக பிள்ளை, கார்க்கமலம் மணவாள பிள்ளை, பாண்டியா பிள்ளை, ஆவணு பிள்ளை........ ....ரும பிள்ளை, நெய்வேலி வீரப்பெருமாள் பிள்ளை, வெள்ளூர் அழக பிள்ளை, மீட்டா பிள்ளை, சிறுவரை மரக்க பிள்ளை, பூவலூர் வீரப்பெருமாள் பிள்ளை, சாத்தகுடிக் கொண்டா பிள்ளை, வேட்டனூர்..................பிள்ளை, கொடிக்குளம் மலையப்ப பிள்ளை, வேங்கடம் பிள்ளை, பெரியணு பிள்ளை, வீரப்பெருமாள் பிள்ளை, ஆளுடையார் கோவில் அம்பலத்தாடு தம்பிரானவர்கள், சாமியப்ப நம்பியார், சிலம்பாத் தான் சேருவைகாரர், ஒக்கூர் சின்னம்பலகாரன், கட்டயனம் பலகாரன், பொதுவக்கூர் சேருவைகாரன், ஆலத்தூர்......... ....பொய்யனூர் அழக பிள்ளை. இவர்கள் சொற்படிக்கு வெள்ளூர் மாகாணம் நாட்டுக் கணக்கு, குப்பையன் கை நெட்டெழுத்து இந்தப்படிக்குச் சந்திராதித்ய பிரவேச புத்திர பௌத்திர பாரம்பரிய பெற்றுக் கொண்டு சுகமே இருக்கக் கடவராகவும். இந்தப் படிக்குச் செங்கால பிள்ளை.

உ

வள்ளல் மலையமான் திருமுடிக் காரி

(ஒரு சிறு நாடகம்.)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

காட்சி ௫.

உறுப்பினர் :—சோழன்-பெருநற்கிள்ளி, பாண்டியன்-உக்கிரப்பெருவழுதி, சேரமான்-மாரிவெண்கோ, மலையமான்-காரி, படைமுதல்வன்-கடியநெடுவில்லி, புலவர் பெருமக்களிருவர், காவலன்.

இடம் :—உறந்தை-வேந்தர் பெருமன்றம்.

பொழுது :—முற்பகல்.

[இராசசூயம் வேட்ட கிள்ளி, காரியை வியந்து மணிமுடிச்சிறப்பு செய்தல்.]

சோழன் பெருநற்கிள்ளி :— வையை வளநாட்டு வழுதி! ஆன்பொருநை மேனாட்டு வானவ! மலையமாநாட்டுத் தலைவ! நீவிர் மூவிரும் எமக்குப் படைத்துணையாகியும் இராசசூயத்துக்குதவியும் ஆற்றிய அருஞ்செயல் எம்முளத்தினின்றுமகலாது. நீவிர் மூவரும் முப்பெருந் தேவர்போல என்றுங்குன்றா நலன்களைப் பெறுவீராக. (அவையோரிடம்) பெருமக்களே! இவண் வீற்றிருக்கும் நங் காவிரிநாட்டினன்பரும் தமிழன்னையின் தனிச்செல்வரும் அண்டர்நாயகனின் அடியவரும் ஆய இப்பாண்டிமன்னர், உக்கிரப் பெருவழுதியாரைக் குறித்து யாம் யாதுமொழிய வியலும்? இப்பெருவழுதியின் திருமன்றத்தன்றோ, நந்தெய்வத் திருவள்ளுவனார் தம் திருக்குறளை அரங்கேற்றி மகிழ்ந்தனர். இத்தகைய பெருந்திருவினரை 'எம்ஆருயிரண்ணல்!' எனப்

போற்றுவதன்றிப் பிறிதொன்றும் மொழியவறியேம். (வழுதியின்பால்) பெரும! எம்மைக்கருதி ஈண்டுப் போந்தருளிய தங்கட்கு எமது உளமார்ந்த நன்றி என்றும் உரித்தாகுக. (மறுபுறம் நோக்கி) எம்குடிமக்காள்! நம் உழுவலன்பர்-வானவர்கோன், நமக்கு என்றும் இனியர். பண்டு, பாண்டவர்க்குப் படைத்துணையாயபோது, செருக்களஞ்சார்ந்த பசிப்பணிமிக்க வீரர்கள் யாவருக்கும் அன்பர், அல்லாதார் என்ற வேறுபாடின்றி உணவு நல்கி 'பெருஞ்சோற்றுதியன் சேரலாதன்' எனச் சிறப்பிக்கப் பெற்ற சேரமானின் வழித்தோன்றலாகிய இம் 'மாரிவெண்கோ' நமக்குப்புரிந்த தொண்டிற்கு நாம் எழுமையுங் கடப்பாடுடையேம். (சேரனைநோக்கி) எம் இனிய நண்ப! எம் நன்றி என்றும் தங்கட்கு உரியதாகுக. (மன்னரையும் மற்றுமுள்ளாரையும் பார்த்து) மாண்புமிக்க மன்னர் பெருந்தகையீர்! நம் முளம்பொருந்திய இம்மலையமான், எமக்காற்றிய உதவிகள் பலவாம். தொண்டி மன்னன் மாந்தரஞ்சேரலிரும்பொறை, வலிய போர்க்கிவண் வந்தபோது, நம் தேர்வண்மலையன் தன்படைகளோடு எமக்குத் துணையாகிச்செய்த உதவியினை என்னென்பேம். அன்று, வெற்றிதருங் 'காரி' யெனுந் தன்பரிமீதிவர்ந்து, மாற்றலர் நடுவில் மின் என ஒளிசெயும் தன் வாளினைவீசி, மடைநீர் ஒப்ப, பகைவருடலினின்றுங் குருதி வெள்ளம் பீறிட்டுப்பாயச் செய்து, சமர்புரிந்தகாட்சி, பேரூழியின் முடிவில் பிள்ளைமதி சூடிய பெருமான்றனது கொள்ளையுயிர் குடிக்குங்கூத்தினையே நினைவுபடுத்தியது. இத்தகைய வீரருட் சிறந்த, நம்தோழமையைப்போற்றும் மலையமானுக்கு, நாம் மூவரும் ஒன்றுபட்ட உளத்தராய், இன்னே ஓர் உயரிய சிறப்புக்கொடை நல்கலாகுமெனக் கருதுகின்றேம்.

உக்கிரப் பெருவழுதி :—பொன்னிவளம் பெறுசென்னி! இம் மலையமான்காரி எம் பாண்டி நாட்டிற்குந் தோழனே யாவன். தொன்மைமிக்க பழந்தமிழ்க்குடி வேந்தராம் நம்பாற் சார்ந்துள்ளவாய ஆண்மை, கொடை, மாண்பு முதலாய பலவும் இக் காரியிடத்தும் நிலைபெற்றுள்ளன. ஒருக்கால், தன் படைவலியால், எமக்குந் துணையாயினன். இத்திறத்த மேனிலைபெற்ற இவற்கு, யாம் செய்யுஞ்சிறப்பு, நம்போன்றார் பெறுதற்குற்றது போன்றதாயிருத்தல் நன்று.

மாரிவெண்கோ :—காவிரி நாட்டுக் காவல! தமிழ் நலந் தழீஇய வழுதி!! மலையமான்காரி சோழரின் தோழன், பாண்டியரின் பாங்கன் என்பனபோல, சேரர்க்கும் சிறந்த நண்பனே

யாவன். இம்மலையனின் கொடை, ஆண்மை, போர்வலி, செங்கோன்மை ஆய பன்னலங்களும் யாம் நன்குணர்வேம். தமிழக மணிமுடி சூடும் வேந்தராகும் நம்மையொப்ப, இவனும் பிறப்பு, குடிநலம், ஆட்சி, கொடை, வீரம் ஆய இன்னோரன்ன தகுதிகள் யாவும் ஒருங்கே கொண்டுளன். எனவே, நம்மைப் போலவே இக்காரியும் ஏன் முடிசூடு மன்னனாயிருத்தல்கூடாது? அவ்வாறு செய்வதே, நம் தோழன்பால், நாம் கொண்டுள்ள உண்மையன்பினை, உள்ளவாறு அறிவுறுத்துவதாகும்.

உக்கிரப் பெருவழுதி :—நன்று நண்ப, நன்று! எம் உழுவலன்பன் சேரமான் உரைத்தனவற்றை, எம்முளமார ஏற்கின்றேம். மலையன், தொல்குடித் தோன்றல்; கொடை வளம் கொண்டவன்; வெற்றிமிக்க குதிரைப்படையோடு தேர்ப்படையுங்கொள்பவன்; மற்றும், மூவேந்தரது மாண்புறும் பெற்றினனுமாவன். ஆதலால், யாம் இன்னே, இவற்கு, ஒருமணிமுடிசூட்டி, இம்மலையனைப் பெருமைப் படுத்துவோமாக.

பெருநற்கிள்ளி :—தண் தமிழ் நாட்டுத் தலைவர்காள்! யாம் பெற்றுள்ள இன்ப நிலையினை எவ்வாறு கூறுவேம். தங்கள் திருவுளப்படியே, நம்மலையற்கு இவ்வுறந்தையிலேயே, எம் இராசசூய வேள்வியின் இறுதியில் 'மணிமுடி சூட்டுவிழா' நடைபெறுவதென்றால், எமக்குற்ற உவகைப்பெருக்கை அளவிடற்கியலுமோ' அன்பரீர்! தங்களருளால் இன்று பெரும்பேறுற்ற யாம், அம் மணிமுடிசூட்டு மங்கலவினையை அவற்குச் செய்ய, எம்மை உரிமைப்படுத்துவீர்களாக.

மாரிவெண்கோ :—வளவ! தாங்களே தகுதியுடையவராவீர். எம் இணக்கம் அதற்கு என்றும் உண்டு.

உக்கிரப் பெருவழுதி :—சீர்மலி சென்னி! இம்மங்கலவினையை மாண்புறக் கொள்ளத் தாங்களே உரியவராவீர். ஏனெனில், இந்நல்விழா, தங்கள் உறந்தையில் நடைபெறுகின்றது; மற்றும், வெற்றியுறமுடித்த இராசசூய வேள்வியால் வானுலகத்து வருணபதம் பெற்றுள்ள தாங்கள், இம்முடிசூட்டு விழாவைப் புரிவது மிக்க பொருத்தமுஞ் சிறப்புமாகும்.

பெருநற்கிள்ளி :—தமிழ்ப் பெரும்பாண்டிய! கரிவரைச் சேர! புலவரீர், பெருமக்களே!! 'உடுக்கை யிழந்தவன் கை போல வாங்கே யிடுக்கண்களைவதாம் நட்பு' என்ற பொய்யில் புலவனின் பொருளுரையைத் தேறுமுகத்தான், எமக்குத்தனது

நாற்படைசூழ எம் நாட்டிற்போந்துதவியும், எம் நண்பர்களாய சேரபாண்டியருக்கும் செவ்வன் ஒருக்கால் செருத்துணை நின்றும், அன்பு, ஆண்மை, இன்னிலை, ஈகை ஆய பலவால் என்றுங்குன்று இசைநிறீஇயும், உயர்ந்த குடிப்பிறப்பும் வீரந்தழீஇய தன்னுமைத்தோட் சிறப்பும் பொருந்த, பெண்ணை நல்யாற்றின் பெருவளங்கொண்டு, முள்ளூர்வரையைத் தன்பாலாக்கித் திருக்கோவன்மாநகர் தன் அரசிருக்கையாக, புலவர்கட்குற்ற புகலிடமாகும் 'மலாடு' எனப்பெயரிய மலையமாநாட்டின் தலைவனாய காரி மன்னற்கு, தண்தமிழ்த்தேவியின் பண்மொழி பயிலும் முடியுடைத் தமிழக மூவருள் ஒருவனாய உறந்தையையாளும் உயர்குடிவேந்தன், சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி என்ற யாம், எம்மூவரையன்றிப் பிறரெவரும் இத்தமிழகத்தே மணிமுடி சூடலாகாதென்ற மரபினைமாற்றி, எம்மலையமான் காரியின்பெறலரும் பெற்றிநோக்கி, சேர பாண்டியர் தம் திருமொழி பெற்று, தமிழக மூவேந்தர் தம் சார்பினின்று, எம்போன்ற இறையுடைமைதரும் பெருநோக்கால், எமது தொடிவளை ஒலிக்குங்கைகளான் முழுமுதலின் திருவருளை நினைந்து, மெய்மொழியுளத்தூய்மையோடு இம்மணிமா முடியினைச் சூட்டுகின்றேம். (முடி சூட்ட யாவரும் மலர்தூவ) திருவாளர்களே! இதுமுதல் நாம் இத்தேர்வண்மலையனை, 'மலையமான் திருமுடிக் காரி' என மொழிவோமாக.

படைமுதல்வன் கடிய நெடுவில்லி:—எம் மலையமா மன்னன், மாரிநிகர்கையன், மாண்பு தழூஉம் வள்ளல், மலையமான் திருமுடிக்காரி, வாழ்க !

யாவரும் :—வாழ்க, வாழ்கவே !!

திருமுடிக்காரி :—சீர்மலிந்த செந்தமிழ் நாட்டு மாண்புறு மன்னர் பெருந்தகையீர் ! எனது உளமார்ந்த வணக்கத்தை ஏற்றருள்வீர்களாக. எளியனின் சிறுபணிகளைப்போற்றி, ஒன்றிய உளத்தால் நீவிர் மூவிரும் வழங்கிய, என்னனையர் என்றுமெய்த வியலாத இப்பெரும் பேற்றிற்கு, யான் யாது கைமாறு புரியக்கூடும். தங்களது பணிவுள்ள நண்பனாய் இவ்வாணுளுள்ளளவும் இயன்றவாறெலாம் தொண்டுபுரிந்து எனது கடமையை ஆற்றுவதொன்றே எற்கியலும். இதனை யான் என்றும் மறவேன் என்பது திண்ணம்.

பெருநற்கிள்ளி :—தேர்வண் மலைய ! நீ செந்தமிழ்த் தேவியின் சீரடி பரவி என்றும் புகழுற இனிதே வாழ்க !

பெருவழுதி :— திருமுடிக்காரி! உமையொருபாகனின் திருவருட்பெருக்கால், எல்லா நலனும் பொருந்த வாழ்க! நினது நட்பும் செயலும் எமக்கு இன்றுபோலென்றும் பொலிவதாகுக.

மாரிவேண்கோ :— மலாடு புரக்கும் மலையமான் திருமுடிக்காரி! முருகவேளின் பெருங்கருணை நலத்தால் நீ, ஒப்பற்ற வீரனாகவும் தன்னலமழித்த நன்னலனாகவும் மிளிர்வாயாக.

கடியநெடுவேட்டுவன் :— வாழ்க எம் மூவேந்தர்!

யாவரும் :— வாழ்க, வாழ்க!

கடியநெடுவேட்டுவன் :— வாழ்க எம் திருமுடிக்காரி!!

யாவரும் :— வாழ்க, வாழ்கவே!!

காட்சி ௫.

உறுப்பினர் :— இராசசூயம் வேட்ட சோழன் பெருநற்கிள்ளி; மலையமான் - திருமுடிக்காரி; உறையூர் முதுகூற்றனார்.

இடம் :— உறையூர் கோமன்றப் பூங்கா

பொழுது :— மாலைப்போது

[மலையமானாடு ஆரியனொருவனா லச்சுறுத்தப்பெற்றபோது, திருமுடிக்காரி அஃதுணர்ந்து தன் நாடு செல, சோழன்பால் விடைபெறுதல்.]

இராசசூயம் வேட்ட சோழன் :— (தனித்து) எங்கும் நிரம்பிய பொருளே; இடுக்கண், அவா, இன்பம், அழுக்குடைமை ஆய பல கட்டுகள் யாவுங்கடந்த கருணையாங்கடலே; அன்பருளக் கோயிலமர் இன்புருவாமொளியே! நினது அருட்செயலை என்னென்பேம். (கூற்றனாரைநோக்கி) புலவர் பெரும! சின்னாளின் முன்னர்சேரவிரும் பொறைக்கு அஞ்சி எங்கியயாம், இதுபோது எளிதிலெய்த வியலா இராசசூய வேள்வியை முடித்து இன்னிலை பெற்றுமகிழ்வது கனவோ அன்றி நனவோ? யாவும் அவனன்றி

அசையா. எம்தோழன் திருமுடிக்காரி தக்கவாறு உதவியதாலன்றோ, இன்று யானைமருப்புடைச்சேரனும் ஒளிநல்முத்துடைப்பாண்டியனும் எம் கலந்த கேண்மையராகி எமது இராசசூயத்தையும் இனிதே நிறைவேற்றித்தந்தனர். யாமும் இராசசூயம் வேட்ட சோழன் பெருநற்கிள்ளி என எவரும் போற்ற இவ்வுறந்தைப் பகுதியின் சோணாட்டிற்குற்ற மன்னவனாய்த் திகழ்கின்றேம்.

உறையூர் முதுகூற்றனார்:—பெரும்பேறுற்ற பெரும! இம் மலையமான் தங்கள்பால் அன்புசெலுத்திய வாறே மற்றைச் சேரபாண்டியரிடத்தும் அன்புமிக்கானாயினன். இஃதுணருங்கால், காரி ஒரு குறுநிலக்கிழவன் மட்டுமல்லன். தங்கள் போன்ற முடியுடை வேந்தர்க்குற்ற தகுதியினனுமாவன். நீவிர் மூவிருமளித்த முடிப்பரிசும் அவற்கு மிகவும் ஏற்புடைத்தே. எனினும், அவனையொத்தபிற குறுநிலத்தலைவர்கள் ஒருக்கால் அவன்பால் அழுக்காறு கொள்ளவுங்கூடும்.

இராசசூய-சோழன்:—அதற்கு என் செய்வது? உயரிய தகுதியைப் பெறுதற்குற்ற ஊழ்வலி மிக்காரை எவராற்றான் தடுக்க வியலும்? எம் தோழன் மலையமான் திருமுடிக்காரி என்றும் இனிதே வாழ்வானாக.

உறையூர்ப் புலவர்:—பெரும! அம்மலையனும் அதோ தங்களைநாடி மிக்க விரைவாக இவண் வருவதைக் காண்மின்.

சோழன்:—வருக எம் காரி! ஏன் இவ்வாறு விரைந்து வந்துள்ளாய்? நினக்கு யாம் புரியவேண்டுவதி யாது?.

மலையமான் திருமுடிக்காரி:—எனது பணிவிற்குரிய தலைவ! யான் விரைவாக, இன்றே என்நாட்டிற்கேக, தடைமொழி பகராது விடை மொழிந்தருள இறைஞ்சுகின்றேன்.

சோழன்:—எம் இனிய! ஏன் அவ்வாறு? நினக்குற்றது என்?

திருமுடிக்காரி:—பெரும! பொறுத்தருள்க. இதனை நோக்குவீராக. (ஒரு முடங்கலை நீட்டுதல்) இம்முடங்கல், இன்று என் படைமுதல்வன் என்பால் வரவிடுத்தது.

சோழன்:—முதுகூற்ற! இதனை நோக்குமின்!

புலவர்:—(முடங்கலை விரித்துப் படித்தல்) ‘மலாடுடைய எம் திருமுடிவேந்தே! தங்கள் திருவடிமலர்களை என்றும் முடிமிசையணிசெய்து கொள்ளும், படைமுதல்வனுப கடியநெடுவில்லி

என்ற தங்கள் அடிமை மிக்க பணிவுடன் தேவரீர் திருமுன்னர் விண்ணப்பிப்பது யாதெனின், மொழிகின்றேன். பெரும! நம் மனாட்டினை முற்றி, வெற்றிபெற, ஆரியநாட்டு வீரியனொருவன், தன் நாற்படைசூழ நாடுகின்றான். யானோ, தங்களாணையை நோக்கி, நம் அமைச்சர், பெருங்குழுவினர், ஊர்த்தலைவர், ஆய சான்றோர்களது பேருதவியினால், மிக்க விரைவினின், வருமுன் காப்போனாக, யாவும் திட்டம் செய்துள்ளேன். நமது திறம் பெற்றுள்ள படைகள் முறையாக அணிசெய்விக்கப் பெற்றுள்ளன. இனி, பகைஞர்கள் தென்னாட்டின் எல்லையை எந்நாளினுங் கருதாதவாறு, போரில் வாட்டி அவர்களை யொழிக்க, வேண்டுஞ் செயல்கள் யாவும் விளக்கமுறப் பெற்றுள்ளோம். நாம் எதற்கும் அஞ்சவேண்டுவதின்று, இதுவே செய்தி! வணக்கம். நலம், நலம்!!

(சோழன் தலையசைப்புடன் மலையமானை நோக்க)

திருமுடிக்காரி:—பெருமன்ன! இப் போர் கருதி யான் கவல்பவனல்லேன். என் படைஞர் தவறாது வெற்றி பெறுவர் என்றவுறுதியும் எற்குண்டு. எனினும், என்நாட்டினர் மாற்றலரோடு மாபோர் புரியும்போது அவர்கட்குத் தலைவனாய யான், இவண், விருந்துண்டு மகிழ்ந்து வாழ்வது பொருந்துமோ? ஆதலால் ஐய! எனக்கு, இன்னே விடைதந்தனுப்புக.

சோழன்:—எமது உளக்கோயிலில் என்றும் மேவிய இறைவனால் எல்லாநலனும் எய்துதற்குற்ற எம் தோழ! நின்னைப் பிரிதற்கு எம்உளம் நைகின்றது. உண்மை நண்பனாய நினது கூட்டுறவால், யாம் பெற்ற இன்பம் இவ்வையக முணரும். யாம் நின் தகுதியினையும், தோழமையையும் பெரிதும் போற்றுகின்றேம். நீ, எம்பாற் கொண்டுள்ள அன்புடைமைக்கும் எமக்காற்றிய பேருதவிக்கும் யாம், எவ்வாறு எமது நன்றியினை நின்பாற் சேர்ப்பதென இதுபோது அறியாதவராயினேம். எம் காரி! நீ, நெடிது வாழ்க! நீ, என்றும் பொன்றாப் புகழுடன் பொலிவுறுக; நீ, இனிதே சென்று நின் மாற்றலனைப் போரில் மண்ணுற வீழ்த்தி, வாகை சூடி பெருமகிழ்வு எய்துக; வாழிய காரி! இனிதே சென்றுவருக!! (காரியைத் தழுவிக் கொள்ளுதல்)

திருமுடிக்காரி:—அடைநெடுங்கல்விப் புலவர் பெரும! என் அன்பார்ந்த தலைவ! சென்று வருகின்றேன். (மகிழ்வுடன் கைகூப்பி) சென்று வருகின்றேன்! விடை பெறுகின்றேன்! (பணிந்து பிரிதல்.)

ஜைன சமயத்தவரால் செய்யப்பட்ட
யசோதர காவியம்—புத்துரை

திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்
காஞ்சீபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 14, மலர் 6, பக்கம் 222)

46. அருவினை [1]விளையு ளாய வருந்துயர்ப் பிறவி தோறும்
வெருவிய மனத்து நம்மை வீடில விளைந்த வாறுந்
[2]திருவுடை யடிகடந்த திருவறப் பயனுந் தேறி
வெருவிநாம் விடுத்த வாழ்க்கை விடுவதற் கஞ்சலுண்டோ.

முன்பாடம்:—[1]வினையு [2]திருவிடை.

போருள்:—"வாழ்க்கை விடுத்த நாம்" என மொழிமாற்றுக.

போழிப்புரை:—தீய வினையின் பயனாகிய பொறுத்தற்கு அரிய துன்பத்தினை உடைய பிறப்புக்கள் தோறும், வருந்திய மனத்தை உடைய நம்மை, விடாது தொடர்ந்த துன்பத்தின் ஏதுவினையும், மேன்மை பொருந்திய சுதத்த முனிகளால் அருளப்பட்ட ஸ்ரீ ஜின தருமத்தின் மேன்மையினையும் அறிந்து, இவ்வுடம்பால் வரும் துன்பத்தினுக்கு அஞ்சி, இந்த உடம்பின் பற்றினுக்கு ஏதுவான இல் வாழ்க்கையின் நீங்கிய நாம் இன்று இவ்வுடலின் நீங்குதற்கு வருந்துவோமோ? என்று கூறினாள் அபயமதி.

குறிப்புரை:—அருவினை—தீயவினை; மரை-அலரானைப்போல கருவினை என்ற சொல்லின் முதல் மெய் திரிபு; கருவினை, நரகத்தில் சேர்க்கும் வினை. விளையுள்—பயன். வெருவி—அஞ்சி, வீடில—விடாது. விளைந்த—தொடர்ந்த. ஆறு—வழி; ஏது. அடிகள்—சுதத்த முனிகள். திருவறம்—ஸ்ரீ ஜின தருமம். தேறி—தெளிந்து; அறிந்து. வாழ்க்கை விடுத்த—இல் வாழ்க்கையின் நீங்கிய. விடுதற்கு—இவ்வுடலின் நீங்குதற்கு. அஞ்சல் உண்டோ—வருந்துவோமோ.

சிறப்புரை:—"அருவினை கழிய நின்ற" (சீவக சிந்-375.) "அருமால் வினையகல" சூளா—முத்தி. 60) "நல்வினை விளையுள்" (சீவகசிந்-2985.) "வினையின விளைவு" (இந்நூல்-5 சர்-53. செய்) "வினையது விளைவின்வந்த" (சீவகசிந்-511.)

"வினைகள்தாம் விளையுமாறு" (சூளா—சுயம்-274.) "வினையின் விளைவே" (சூளா-துறவு 100.) "திருவுடையடிகள் நின்றி" (சூளா-துறவு 126.) திருவுடையடிகள்தம்" (சூளா-முத்தி 30.) (சஙஉ)

47. பெண்ணுயி ரெளிய தாமே பெருந்திற லறிவும் பேராத்
திண்மையு முடைய வல்ல சிந்தையி னென்ப தெண்ணி
[1]யண்ணனீ யருளிச் செய்தா [2]யன்றுநல் லறத்திற் காட்சி
கண்ணிய மனத்த ரிம்மைக் காதலு முடைய மோதாம்.

முன்பாடம்:—[1]யண்ணணீ. [2]யன்றிநல்

பொருள்:—"அண்ணல் நீ பெண் உயிர்" எனவும், "என்பது சிந்தையின்" எனவும் கொண்டு கூட்டுக.

பொழிப்புரை:—அண்ணு! நீ, இவ்வுயிர் பெண்பிறப்பினை உடையது ஆதலால், மெல்லியது ஆம். அன்றிப், பெருமை பொருந்திய வலிய அறிவையும், இடரினுக்குச் சலியாத திண்மையையும், உடையது அன்று என்பதனை மனத்தில் நினைத்து என்னிடத்துப் பொருந்திய அன்பினுலே சொல்லினை. அன்று, சுதத்த முனிகளால் அருளப்பட்ட ஸ்ரீஜின தருமத்தின் தெளிவைக்குறித்துக் கொண்ட மனத்தினராகிய யாம், இன்று இவ்வுலக வாழ்க்கையில் விருப்பம் உடையவர் ஆகுவமோ என்று கூறினுள் அபயமதி.

குறிப்புரை:—பெண் உயிர்—பெண் பிறப்பு. எளியது—மெல்லியது. சிந்தையின்—மனத்தின். அருளிச் செய்தாய்—சொல்லினை. அன்று—சுதத்த முனிவரிடம் அறம் கேட்ட காலம். நல்ல அறம்—ஸ்ரீஜின தருமம். காட்சி—தெளிவு. கண்ணிய—குறித்த. இம்மை—இவ்வுலக வாழ்க்கை; ஆகுபெயர். காதல்—விருப்பம். ஏ, உம், தாம்—அசைகள்.

சிறப்புரை:—"மெய்ப் பொருள் தேறுதல் காட்சி" (சூளா—துறவு-179) "உள் பொருளிது வெனவுணர்தன் ஞானமாந், தெள்ளிதினப் பொருள் தெளிதல் காட்சியாம்" (சீவகசிந்-2845.) "உரைத்த இப்பொருளின் மெய்ம்மை உணர்வது நல்ல ஞானம், புரைப்பறத் தெளிதல் காட்சி" (மேருமந்-107.) "மெய்ப் பொருள் தேறுதல் நற்காட்சி என்றுரைப்பர், எப்பொருளுங் கண்டுணர்ந் தாய்" (அருங்கலச் செப்பு—) "காட்சி வகைதான் கடவுள் முதலாய, மாட்சியமைந்த பொருளெட்டு மனத்து வைத்து மீட்சியிலதாய் விரிந்துந்திய இன்ப வெள்ள, வேட்கையதுவாம் தெளிவென்றனர் வென்றவரே" (நீலகேசி 121.) (சஙஙு)

48. இன்றிவ ணைய வென்க ணருளிய பொருளி தெல்லாம்
நன்றென நயந்து கொண்டே னடுக்கமு மடுத்த தில்லை
யென்றனுக் கிறைவனீயே யெனவிரு கையுங் கூப்பி
யின்றுயா னியாது செய்வ தருளுக தெருள வென்றாள்.

பொழிப்புரை:—ஐய! நின்னால் இப்போது இத்துன்ப நிலைமையில் என் பொருட்டுச் சொல்லப் பட்ட உண்மைகள் யாவையும், எனக்கு நல்ல உறுதிபயப்பன என்று விரும்பி யான் என் மனத்துட் கொண்டேன். என் மனத்தில் அச்சம் பொருந்தி இல்லை. எனக்கு ஆசிரியன் நீயே என்று இருகைகளையும் கூப்பிக் கொண்டு இனி யான் செய்யத் தக்கது யாது? அதனை யான் அறியும்படிச் சொல்லுதல் வேண்டும். என்று கூறினாள் அபயமதி.

குறிப்புரை:—இன்று—இப்போது. இவண்—இத்துன்ப நிலைமையில். இது—அசை. நயந்து—விரும்பி. நடுக்கம்—அச்சம் அது—அசை. இறைவன்—ஆசிரியன். இன்று—இனி. அருளுக-சொல்லுதல் வேண்டும். தெருள—அறியும்படி.

சிறப்புரை:—"என்றலும் இறைவ அன்று என்னரகத்துள் இடும்பை தீர்த்தாய், இன்றும் இப்பிறவி எல்லாம் நின்றவாறு எனக்குச் சொல்லி, வென்றவர் அறத்திற் காட்சி விமலமதாகச் செய்தாய், என்றனக் கிறைவன் நீயே" (மேருமந்-989.) (சமிச)

49. ஒன்றிய வுடம்பின் வேறு முயிரின துருவ முள்ளி
நன்றென நயந்து நங்கள் நல்லறப் பெருமை நாடி
வென்றவர் சரண மூழ்கி விடுதுநம் முடல மென்றான்
நன்றிது செய்கை யென்றே நங்கையு நயந்து கொண்டாள்.

பொருள்:—நங்கள் பெருமை நல் அறம் நன்று என நயந்து நாடி உடம்பின் ஒன்றிய உயிரினது உருவம் வேறும் உள்ளி வென்றவர் சரணம் மூழ்கி நம் உடலம் விடுதும் என்றான். நங்கையும் இது செய்கை நன்று என்று ஏ நயந்து கொண்டாள்.

பொழிப்புரை:—நம்முடைய பெருமை பொருந்திய ஸ்ரீஜின தருமத்தினை நல்லது என்று விரும்பிக் கற்று ஆய்ந்து, அதனால், உடலிற் பொருந்திய உயிரினது உருவம், உறையுள் இருக்கும் வாள் போலும், உடம்பின் வேறாகும் என்பதனை அறிந்து, ஐம்பொறிகளால் சேரும் எண்வகை வினைகளையும் கெடுத்தவர் ஆகிய ஸ்ரீ பஞ்ச பரமேட்டிகளுடைய திருவடிகளில் மனத்தைப் படியச் செய்து நாம் நம் உடலின் நின்றும் நீங்குவாம் என்று கூறினான் அபயருசி. அபயமதியும் இச் செயலை நன்று என்று மனம் மகிழ்ந்து ஒப்புக்கொண்டாள்.

குறிப்புரை:—உள்ளி—நினைத்து; அறிந்து. நல் அறம்—ஸ்ரீஜின தருமம். வென்றவர்—ஸ்ரீ பஞ்ச பரமேட்டிகள். பாதம்—திருவடிகள். மூழ்கி—மனத்தைப் படியச் செய்து; தியானித்து. நங்கை—அபயமதி. நயந்து—மகிழ்ந்து.

சிறப்புரை:—வென்றவர்-பஞ்சபரமேட்டிகள் என்றது பின் அப்பஞ்ச பரமேட்டிகளைத் தனித்தனியாகத் துதிப்பதால், இவண் தொகையாகச் சொல்லி வைத்தார் போலும். "அறிவன் முதல் ஐவர் சரணம் புகுதியாயின், பிறவி மறு சுழியின்வழி யோழு குதல் பிழைத்தி" (மேருமந்-962.) பஞ்சபரமேட்டிகள் என்பவர் சித்தர், அருகர், ஆசாரியன், சாதுவர், உபாத்தியாயர் என்ற ஐவகையர். "அருகனைச் சரண மூழ்கி" (மேருமந்-739) "அறிவன சரண மூழ்கி" (மேருமந்-970) "அறிவரண் சரண மூழ்கி" (இந்நூல் 4-30.) (சூ௫)

50. அறிவொடா லோக முள்ளிட் டநந்தமா மியல் பிற்றுகி
யறிதலுக் கரிய தாகி யருவமா யமல மாகிக்
குறுகிய [1]தடற்றுள் வாள் போற் கொண்டுயி ருடம்பின் வேறு
மிறுகிய வினையு மல்ல தெமதியல் [2]பின்று என்றான்.

முன்பாடம்:—[1]தடத் தோள் வாள் போற் கொண்டியலுடம்பின். [2]பென்று நின்றார்.

பொருள்:—அறிவு ஒடு ஆலோகம் உள் இட்டு அநந்தம் ஆம் இயல்பிற்று ஆகி அறிதலுக்கு அரியது ஆகி அருவம் ஆய் அமலம் ஆகி குறுகிய தடறு உள் வாள் போல் உடம்பின் கொண்டு உயிர் வேறாம். இறுகிய வினையும் அல்லது எமது இயல்பு இன்று என்றான்.

பொழிப்புரை:—நன் ஞான நற்காட்சிகளைத் தன்னுள் கொண்டு எண்ணில் அடங்காப் பண்பின வாகியும், அறிதலுக்கு அரியவாகியும், உருவம் இல்லாதன வாகியும், அழுக்கு இல்லா தன வாகியும், உடம்பினைக் கொண்டும், நெருங்கிய இடை வெளியையுடைய உறையுள் உள்ள வாள் போல அவ்வுடம்பின் வேறாகியும் நிற்பன ஆகும் உயிர்கள். அப்பண்பினை உடைய நம் உயிர்கள், தம்மைச் சேர்ந்த வினைகள் செலுத்தும் வழிச் செல்லும் ஆதலால் நமக்கு அவ் வழியல்லது வேறு வழி இல்லை. என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—அறிவு—நன்ஞானம். ஆலோகம்-நற்காட்சி. அநந்தம்-பல; எண்ணில் அடங்கா. இயல்பு-பண்பு; குணம்-அருவம்-உருவம் இல்லாத. அமலம்-அழுக்கு இல்லாத. குறுகிய நெருங்கிய. தடறு-உறை. இறுகிய-சேர்ந்த. எமது-நமக்கு. இயல்பு-வழி.

சிறப்புரை:—"அறிவொடு ஆலோகந் தன்னை யாரிருள் போல நின்று, மறுதலைச் செய்யும் ஞான காட்சி யாவரணம்" (மேருமங்-613.) "தன் உடம்பு உயிரினைத் தடறு வாள் என உன்னி" (மேருமங்-550) "உடம்பு உயிர் உறைவாள் நேர் என்று உடம்பை விட்டு உயிரைப் பார்த்து" (மேருமங்-1369) "வாளும் தடறும் போல் பின்னம் எனவே பிரித்து உணர் மின்" (திருக்க-76) செறிபுறத் தடற்று வாளும்" (சீவகசிந்-2517) "இறுகிய வினைகளுக் கிறைவனுய பின்" (மேருமங்-82) "துறந்திடா வினைகள் அன்றித் துணை பிறிது இல்லை" (மேருமங்-112) "குடங்கையில் விளக் கெனக் கொண்ட கொண்டதன், னுடம்பினது அளவுமாம் உலகம் எங்கும் ஆம், ஒடுக்குழி புரை தரங்கு இல்லை போங்கிய இடங்களிற் பிளத்தலும் இன்று அமூர்த்தியால்" (மேருமங்-81)

51. உறுதியைப் பெரிது மாக்கி யுலகினுக் கிறைமை நல்கிப்
பிறவிசெற் றரிய வீட்டின் பெருமையைத் தருத [1]லாகு
மறிவினிற் செறிந்த மாட்சி யரதனத் திரய மென்னும்
பெறுதலுக் கரிய செல்வம் பெற்றனம் பெரிது [2]மேன்றான்

முன்பாடம்:—[1]லானும். [2]மேன்றார்.

பொழிப்புரை:—உயிரினுக்கு உறுதியை மிகுதியாகச் செய்து, உலகின்கண் உயர்வை அருளி. பிறத்தலுக்கு ஏதுவான தீமையைக் கெடுத்து, அடைதற்கு அரிய வீட்டினைத் தருவ தாகிய ஞானத் தோடுகூடிய மாட்சிமையினை உடைய, இரத் தினத்திரயம் (நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம்) என்னும், பெறுதலுக்கரிய சிறந்த செல்வத்தினைச் சுதத்த முனிவர்பால் யாம் பெற்றனம் என்று கூறினன் அபயருசி.

குறிப்புரை:—இறைமை—உயர்வு. நல்கி—அருளி. பிறவி—தீமை; ஆகு பெயர். செற்று—கெடுத்து. பெருமை—இன்பம். அறிவு—ஞானம். செறிந்த—கூடிய. அரதனத்திரயம்—மூன்று ரத்தினங்கள்; அவை, நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்பன. பெரிது—சிறப்புப் பொருட்டு. உம்—அசை.

ஸ்ரீ சித்த பரமேட்டிகள் வணக்கம்[1]

52. எங்குநம் மிடர்க டீர்க்கு மியல்பினர்[1]நினதுமேலி
[2]ஞேங்கிய உலகத் தும்ப ரொளிசிகா மணியினின்றார்
வீங்கிய கருமக் கேட்டின் விரிந்த வெண் குணத்தராகித்
தீங்கெலா மகற்றி நின்ற சித்தரே செல்ல தீர்ப்பார்.

முன்பாடம் :—[1]நினைந்து மேலிவ் [2]வோங்கிய.

பொருள் :—கருமக் கேட்டின் வீங்கிய தீங்கு எலாம் அகற்றி நின்றுவிரிந்த எண் குணத்தர் ஆகி உப்பர் உலகத்து மேலின்

ஓங்கிய சிகாமணி ஒளியின் நின்றார். சித்தரே செல்லல் தீர்ப்பார் ஈங்குநம் இடர்கள் தீர்க்கும் இயல்பினர். நினைதும்.

பொழிப்புரை :—ஞானவரணாதி எண்வகைக் கருமங்களும் கெட்டதனால், மிக்க துன்பங்களின் நீங்கி, அநந்த ஞானாதி எண்வகைக் குணங்களை உடையவராய்த் தேவர்தம் உலகத்தின் மேல் இடத்தில் இராநின்ற சித்தபதவியில், மாணிக்க மணி போலும் ஒளியினை உடையவராய் இருக்கின்ற ஸ்ரீ சித்த பரமேட்டிகளே, பிறர் துன்பம் தீர்க்க வல்லவர். அவரே நம்முடைய துன்பங்களையும் தீர்ப்பார் ஆதலால், அவர்களுடைய திருவடிகளை யாம் தியானிப்பாம் என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—ஈங்கு—அசை. இடர்—துன்பம். இயல்பினர்—பண்பினர்; வல்லவர். நினைதும்—தியானிப்பாம். சிகாமணி—நாகத்தின் தலையின் நின்றும் உதிர்ந்தமணி; மாணிக்க மணி. வீங்கிய—மிக்க. கருமக்கூட்டம்—எண்வகைத் தீவினை; அகற்றிநின்ற—ஒரு சொல்; கெடுத்த. விரிந்த—மிக்க; அநந்தம். எண்குணம்—அநந்தஞானாதி குணங்கள் எட்டும். சித்தர்-பஞ்சபரமேட்டிகளுள் ஒருவர். செல்லல்—துன்பம்.

சிறப்புரை :—ஞானவரணாதிவினைகள்-ஞானவரணியம், தரிசனவரணியம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம் அந்தராயம் என்பன. அநந்த ஞானாதிகுணங்கள்-கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி கடையிலா வீரியம், கடையிலா இன்பம், நாமம் இன்மை, கோத்திரம் இன்மை, ஆயு இன்மை, அழியா இயல்பு என்பன. "வெவ்வினை யெண்மையின் கேட்டில் எண் குணம் எய்தி" (மேருமந்-70) "கரந்தன கடியவாய கருவினைக் குழாங்கள் ஆங்கே" (மேருமந்-1045.) "மணியுயிர், பொன்னுயிர், மாண்டவெள்ளியின் அணியுயிர்" (சீவகசிந்-3111.) "வெம்புஞ் சுடரின் சுடரும் திருமூர்த்தி" (சீவக சிந்-பட-2) "பொன்னுயிராய்ப் பிறந்துயர்ந்து போதுமே" (சீவகசிந்-3107.) (சுஉஅ)

ஸ்ரீஅருகத் பரமேட்டிகள் வணக்கம். 2.

53 பெருமலை யனைய காதிப் பெரும்பகை பெயர்த்துப் பெற்ற
திருமலி கடையி [1]ஞண்மைத் திருவொடு திளைப்ப ரேனு
முரிமையி னுயிர்கட் கெல்லா மொருதனி விளக்க [2]மாய
திருமொழி யருளுந் தீர்த்த கரர்களே துயர்க ளைப்பார்.

மூன்பா :—[1]ஞண்மை. [2]மாகித்.

பொழிப்புரை :—கொடுமை செய்தலில் சரியாமையால் பெரிய மலைபோன்ற காதி கருமம் ஆகிய பெரிய துன்பத்தினை நீக்கி, அதனால் பெற்ற பெருமை மிக்கதும் எல்லை இல்லதும் ஆகிய அநந்த ஞானாதி நான்குவகைச் செல்வத்தினை அனுபவிப்பவர் ஆயினும், தம்கடமையாக மூன்று உலகங்களின் உயிர்கட்கு எல்லாம், அறிவு விளக்கந்தருதலால் ஒப்பற்ற சூரியன்போன்று அறிவிற்கு விளக்கந் தராநின்ற வேத ஆகமங்களை அருளிய ஸ்ரீ அருகத் பரமேட்டிகளே நம்மைத் துன்பங்களின் நின்றும் நீக்குவார். ஆதலால் யாம் அவர்தம் திருவடிகளைத் தியானிப்பாம் என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—காதி-தீவினை. பெயர்த்து—நீக்கி. கடையில் நான்மை—அநந்தஞானாதி நான்கு. திருமொழி—ஆகமங்கள். தீர்த்தகரர் — அருகபரமேட்டிகள்; துயர்கள் — துன்பங்கள்.

சிறப்புரை :—காதி—ஞானாவரணியம், தரிசனாவரணியம், மோகநீயம், அந்தராயம், என்பன நான்கும், "காதிநான்மை கடந்தோய் நீ" (மேருமந் — 867.) "காதியாமிருவினையைக் கடிந்தாய் நீயே" (ஸ்ரீவசம்—29.) கடையில் நான்மை—அநந்த ஞானம், அநந்த தரிசனம், அநந்த வீரியம், அநந்த சுகம் என்பன நான்கும்; "கடையின் நான்மை அடைந்தோய் நீ" "பரம நான்மை அடைந்தோய் நீ" (மேருமந்—807, 808) "அநந்தநான்மையே" (சிவகசிந்—2846.) திருமொழி—அங்காகமம், பூர்வாகமும், பகுசுருதி ஆகமம் என்பன மூன்றும். அவை முறையே "பன்னிரண்டும், பதினான்கும், பதினாறும், ஆக நாற்பத்திரண்டு" (சீவகசிந் — 2815-ன் உரைக்குறிப்பு.) "வேதாகமங்கள் ஆறேழால் விரித்தான்விமலன்" (திருக்க—78.) "ஆறிரண்டங்கமும் ஆய்ந்து ஈரேழ் பூர்வமும், கூறிரண்டு எண் கேள்விகளில் குன்றுமல்—தேறி, வரந்தருநல் லோத்துரைக்கும் வாய்மையார் பாதம், நிரந்தரம் நான் வந்திப்பன் நின்று." (ஜீவசம் போதனை—கடவு—4.) (சமிகூ)

ஸ்ரீ ஆசாரிய பரமேட்டிகள் வணக்கம்[3].

54. ஐவகை யொழுக்க மென்னு மருங்கல மொருங்க ணிந்தார்
மெய்வகை விளக்கஞ் சொல்லி நல்லற மிகவ ளிப்பார்
பவ்வியர் தம்மைத் தம்போல் பஞ்சநல் லொழுக்கம் பாரித்
தவ்விய மகற்றுந் தொல்லா சிரியரெம் மல்லற் தீர்ப்பார்.

பொருள் :—"அரும் ஐவகை ஒழுக்கம்" எனவும், "நல்லறம் மிக சொல்லி மெய்வகை விளக்கம் அளிப்பார்" எனவும் மொழி மாற்றுக.

பொழிப்புரை :—பெருமையினை அளவிட்டு அறிதற்கு அரிய பஞ்ச சீலங்கள் என்னும் ஆபரணங்களைக் குறைவின்றி அணிந்தவரும், ஸ்ரீ ஜினதருமத்தின் பெருமையினைச் சொல்லி பொருள்களின் உண்மைத் தன்மையினைத் தெரிவிப்பவரும், பௌவியர் தம்மைத், தம்மைப்போல் பஞ்ச சீலங்களையும் மேற்கொண்டு ஒழுகும்படிச் செய்து, அவர்களுடைய தீவினைகளைக் கெடுப்பவரும் ஆகிய தொன்று தொட்டு ஸ்ரீ ஆசாரிய பரமேட்டிகள் என்று சொல்லப் படுபவர்கள், நம்முடைய துன்பங்களைத் தீர்ப்பவர்கள் ஆவர். ஆதலால் நாம் அவர்களுடைய திருவடிகளைத் துதிப்பாம் என்று கூறினன் அபயருசி.

குறிப்புரை :—அரும்—அரிய. ஐவகை ஒழுக்கம்—பஞ்ச சீலம். கலம்—ஆபரணம். ஒருங்கு—யாவையும்; குறைவின்றி. மெய்வகை—உண்மைத்தன்மை. விளக்கம்—தெரிவு. பவ்வியர்—அறங்கேட்டற்கு உரியர்; மோக்ஷத்துக்குப் பக்குவர். பாரித்து—சுமந்து; மேற்கொண்டு. அவ்வியம்—தீவினை. அகற்றும்—நீக்கும்; கெடுக்கும். ஆசிரியர்—ஸ்ரீ ஆசாரிய பரமேட்டிகள். அல்லல்—துன்பம்.

சிறப்புரை :—ஐவகை ஒழுக்கம், பஞ்சநல் ஒழுக்கம், பஞ்ச சீலம் என்பன—ஒரு, தொகைப் பொருள் சுட்டிய பெயர்கள். பஞ்சசீலம் என்பது பொய்யாமை, கொல்லாமை, கள்ளாமை, தனக்குரிய பெண்டிர் அல்லாத அயல் பெண்டிரை விரும்பாமை, தனக்கும், தன் குடும்பத்தின் தேவைக்கும் மிகுதியாக மிகு பொருள் தேடாமை. ஆகிய இவ்வைந்து செயல்களையும் மேற்கொண்டு ஒழுகும் ஒழுக்கத்தின் பெயர் ஆம். "பொய் கொலை களவு காமம் அவா இருள் புகாது போற்றி, செய்தவம் நுனித்த சீலக் கனைகதிர்த் திங்கள் ஒப்பார்" (சீவகசிந்—2824.) "செப்பிய சீல மென்னுந் திருமணி மாலை சூழ்ந்தார் கற்பத்துள் அமரர் ஆவர்" (சீவகசிந்-2845.) "பெருகிய கொலையும் பொய்யும் களவொடு பிறன் மனைக்கண், தெரிவிலாச் சிந்தை பொருள்வயின் திருகுபற்றி, மருவிய மனத்து மீட்சி வதமிவை ஐந்து" என்றார் இந்நூலுள்ளும் (சருக் 5—செ 17.)

"பெரியகொலை பொய்களவொடு காமம் பொருளை வரைதலோடைந்து" (அருங்கலச்.) (ருO.)

(தொடரும்.)

உ

சிவமயம்

பள்ளியகரப் பழங்கதை*

(மூலமும் பழையவுரையும்)

நூலாசிரியர்—மெய்யறியா முனிவர்

உரையாசிரியர்—கயவமா முனிவர்

நூலின் வரலாறு

இவ்வருள் நூல், மெய்யறியா முனிவர் என்னும் பெரியாரால் முதலூழியின் முதலிலேயாக்கப்பட்டதாகக்கூறுவர். இந்நூல், முதன்முதலாக, நான்முகன், மால், இந்திரன் முதலியோர் மறைந்துநின்ற வூழியின் முடிவிலே சிவபெருமான் தனித்து யாழ்வாசித்து இன்புற்றிருக்குங்கால் அவ் யாழொலியில் பிறந்ததெனக் கூறுவாருமுளர். இது பல்வகைப் பாக்களாலமைந்து எண்பத்திரண்டு நூறாயிரத் தெழுநூற்றுத் தொண்ணூற்று நான்கு செய்யுட்களையுடையது எனவுங் கூறுவர். இதுபோது நமக்குக் கிடைத்துள்ள பிரதியொன்றில் காணப்பெறுவன நூற்றெண்பத்து நான்கு முழுச்செய்யுட்களும், பலசெய்யுட்களின் அடிகளும், தொடர்களுமேயாம்.

இவ்வருணூலுக்குக் கயவமாமுனிவர் என்னும் பெருந்தகையார் வகுத்துரைத்ததோர் சிற்றுரையுங் காணப்பெறுகின்றது. இச்சிற்றுரையை நோக்குங்கால் "கந்தமாபாடியம்" என்னும் பெயரோடு பேருரையொன்றுங் காணப்படுகிறது. அவ்வுரை இதுபோது கிடைக்கப் பெற்றிலேம். கிடைத்த

* இப்புராணப் பகுதிகள் இன்றைக்கு இருபது ஆண்டுகளுக்குமுன்னர் நம் சங்கத்தில், காலஞ்சென்ற கூடலூர் வித்துவான் இராமசாமி வன்னியரவர்களால் முதன்முதல் வாசிக்கப் பெற்றன. இந்தச் செய்யுட்களை அக்காலத்து எட்டில் படித்து மகிழ்ந்தவர்களில், இப்போது இங்கில்லாதவர்களாகிய சிங்காரவேலு முதலியார், பா. வே. மாணிக்கம் நாயக்கர், இராம. நடேசபிள்ளை முதலிய தமிழன்பர்கள் நினைவுக்கு வருகின்றனர்.

வளவில் வெளியிடல் நலமென்றெண்ணிக் கயவமாமுனிவர் சிற்றுரையோடு வெளியிடத் துணிந்தேம்.

[இனி வருவனவெல்லாம் நூலாசிரியர் உரையாசிரியர்களது கூற்றேயாம்.]

நூல்

இந்நூலருளிய வெங்குருமரபின் மூன்றாங்குரவராகிய மெய்யறியா முனிவரென்பார், திருக்கைலாயமலையில் கல்லூரியமைத்துத் தலைமையாசிரியராகப் பலவகை நூல்களையு முரைத்துவந்த திருநந்தி தேவரது முதன் மாணாக்கரு நண்பருமாவர்.

யோகு கூடியிருக்குங்கால் தம் மெய்யினைமறந்து நிற்பாராகலின் இவரை மெய்யறியா முனிவரெனக் கூறுவர். மெய்யறியார் என்னுந் தொடருக்கெவரேனும் உண்மையறியாரென்று பொருளுரைப்பரேல் அது பெருங் குற்றமாய் அழல்வாய் நிரயத்துய்க்குமெனவறிக. இவ்வுரை வகுக்குமியாம் இம்முனிவரது ஞான மரபில் பன்னீராயிரத் தெண்ணூற்றேழாந் தலைமுறையெனவறிக. இது முதலிலக்கியமாதலான் இதற்கொரு இலக்கண நூலும் வேண்டாவெனவறிக. இந்நூற்குப் பொருத்தமாமிலக்கணங்களைக் கொள்ளுக; அல்லாதனவற்றைத் தள்ளுக. அகத்தியந் தொல்காப்பியம் என்பன பிற்காலத்திய விலக்கணங்களாம். அகத்தியனாரிம்முனிவர் மாணாக்கருளொருவரென்பதற்குத் தக்க சான்றுகளுள்ளன. இவ்வுண்மையைச் செந்தமிழ்ப் படலம், திருமணப்படல முதலியவற்றுட் காண்க.

இனி, இந்நூலுள் முதலில் வாழ்த்துப்படலங் காணப்பெறுகின்றது. வாழ்த்துகூறி வணக்கஞ் செப்பியது எவ்விலக்கணத்ததோவெனின் இவ்விலக்கணத்ததெனக் கூறுவாம். பிற்காலத்திய திருவள்ளுவர், கடவுள் வாழ்த்தெனக்கூறி யாண்டு கடவுள் வணக்கத்தை வற்புறுத்துதலையும், ஆண்டவனிதுகாறுஞ் செய்தவருளை நினைந்து வாழ்த்துதலே முறையென்பதனையுங் கூறுக. கடவுள் எம்போலியார்பால் வணக்கமும்வேண்டான், யாம் அவன்பால் அது தவிரேம். எம்பெயர் கயவாமாமுனிவரென்பது உலகம் உணரும். “கயவென் கிளவி பெருமையுஞ் செய்யும்” என்பது விதியாகலின் யாம் பெருமையுஞ் சிறுமையுங் கலந்துள்ளேம் என்பதுதெளிக. பத்திப்பெருமையேம்! பாசச் சிறுமையேம்!.

வாழ்த்துப் படலம்

விநாயக வணக்கம்.

உலகமலை யொருகதையை வரைதீட்டி யொருகோடு இற்றதேனும்
பலகலையும் புணர்பள்ளி யகரநகர்ப் பழங்கதையைப் பார்மேற்றீட்ட
நிலவுதிக ழொருகோடென் பாலுளது எனக்காட்டி நேயம்பூணும்
புலவருளத் தோன்றிநிறை யானைமுகப் புத்தேள்த னடிமேற் கொள்வாம்.

குறிப்புரை.

உலகமலைக்கும் ஒருபெருங் கதையை மலையிலெழுதிக் கொம்பிழந்த விநாயகப்பெருமான், அவ்விழவுங் கருதாது இப் புராணம் வரையவேனைய கோடுகொண்டு எழுந்தருளுகின்றான். அதனு னவனடிவணங்குவாம் என்றார். பொய்க்கதை புனைந்த வியாசனுக்குத் துணைபுரிந்தமையான் விநாயகர் கொம்பிழந்தமையைக் குறிப்பித்தது, பொய் கூறுவோரும், பொய் கூறுவோர்க்குத் துணைபுரிவோரும் கடவுளரேயெனினும் தண்டம்பெறுவது திண்ணமென்னு நீதியை யுணர்த்துவதற்கென்க.

"பலகலையும் புணர்பள்ளியகரநகர்" என்றமையான் இந்நகர்வாழ்நர் கலையுங் கல்வியுந் தாமேவந்து புணர்ந்தாலன்றித் தாம் அவற்றைப் பொருட்படுத்தாப் பெருவீரர் என்பதுணர்த்துதல் பெற்றும்.

"பார்மீது தீட்ட" என்றமையான் வரையிற்றீட்டிய மாபாரதத்தினுமிது பெரிதென்பதுணர்த்துதல் பெற்றும். வரையின் பரப்பினும் பாரின் பரப்பு மிக விரிந்ததென்பது யாவருமறிவர்.

"நிலவு திகழ்கோடு" என்றது அக்கோட்டின் பெருமையைக்குறித்து நின்றது. ஒரு கோடிழந்த விநாயகர் ஏனைய கோடுமிழத்தற்கு முன்வருதல் இம்முனிவர்மாட்டுள்ள அருளும், பழங்கதைபாலுள்ள பரிவும் எனத் தெரியலாகும். கோடு கோடாவிருப்பின் அதனையிழக்க முன்வருதல் எளிதாகலின் "நிலவுதிகழ்" என அதன் அருமைகுறிப்பிட்டார். பொய்யெழுதிக் கோடிழந்தும் அறிவு பெறாது இன்னும்பொய்யெழுத முன்வருகின்றான் என்று பிள்ளையாரின் பிள்ளைமையை "ஏனும்" என்னுஞ் சொல்விளக்குவது காண்க.

உலகமெனத் தொடங்குதலே சாலச்சிறந்ததென இவ்வாசிரியரைப்பின்பற்றியே பிற்காலத்திய சேக்கிழார், கம்பர் முதலான ஆசிரியர்கள் நூன்முதலில் மங்கலமொழி வகுத்துக் கூறு

வாராயினர். உலகத்தே பல நாட்டும் பல்லுருவிற்றேன்றி யலேகின்றமையால் உலகம் அலேகடையெனவும், உலகக்கதையி னுள்ளே மலேபோன்று நிற்றலின் மலேகதையெனவும், உலக மலேவு என்னும் குற்றத்திற்கு இலக்கியமாகத் திகழ்கின்றமை யின் உலகமலேவு ஒருகதை யெனவும் பொருள் சொல்வர். "உலகமலே" என்னுந் தொடருக்கு ஓராயிரம் பொருள் விரித் துரைத்தார் கந்தமாமுனிவரென்பதனே

"உலகமலேயெனுந் தொடர்க்கு ஓராயிரம் பொருள்
உண்டாக்கிவைத்த புனிதன்
கலகமலே செய்குவோன் கருத் தொருமை காட்டினேன்
கந்தமா முனிவனடிகள்"

என முயற்கோட்டுக் கயக்கொற்றனர் மொழிவதாலுமறிய லாகும். விரிப்பிற் பெருகுமென்றஞ்சி விடுத்தனம். "புத்தேள்" என்னுஞ் சொல் தம்மை வணங்காரைத் தேள் போலத் துன்புறுத்துவார் என்னும் பொருளதாய்ச் சொல்லாயிற்று. இன்றும் வாயிலிற் றேள்வரின் பிள்ளையார் கோயிலிற் றேங்கா யுடைப்பதனுலறிக.

முருகன் வணக்கம்

பள்ளியிது முதலகரம் பயின்றபதி யிதுவாத லுலகந்தேற
வெள்ளியதன் பெயர்காட்டி விலங்கல்விளக் கன்னதொரு வீறுகாட்டுந்
தெள்ளறிஞ ருறைவீர மாபுரியின் றிறமுலக மறியச்செப்ப
வள்ளிபுண ருட்டருவாங் குமரவேள் வள்ளலடி வணங்கிவாழ்வாம்.

குறிப்புரை.

ஆறுமுகப் பெருமான் முதன் முதல் பயின்ற பள்ளி இது வென சுட்டியும், அப்பள்ளியிற் பயின்றது தமிழ்மொழியே யென்பதனே "அகரம்" பயின்ற தெனச் சாரியையொடுபுணர்த் துக் கூறியும், பள்ளிபயின்ற தன் பதிப்பெயராலேயே வெளிப் படையாகக் குறிப்பித்தார். பள்ளி பயின்ற இளம்பருவந் தொட்டு வள்ளிநாச்சியாரை மணந்துகொண்ட காலம்வரை இப் பதியிலேயே இனி தமர்ந்திருந்தமையைக் குறிப்பாற் பெற வைத்தார். இதுகாலேயிவணிலன்; இந்நகரத்தாரது இக்காலத் தன்மை கருதி யேகினன்போலும். முருகன் பள்ளிபயின்றான் என்னும் உயர்வு கருதியே பிறதெவரும் பள்ளிபயிலாராயினர்.

தசராத்திர முதலிய வடநூல்களில் திருமால் பள்ளி கொண்டமையினலேயே இப்பதி பள்ளியகரமெனப் பெயர் பெற்றதெனக் கூறலும், தென்மொழியாளரிற் சிலர்,

"இருநதி மருங்கிற் பொருநதித் தலைவன்
உலகந்தேறு மாலுகந் தொரு பள்ளி
வைத்தலாற் பள்ளி யகரமென் றறிஞர்
அழைக்கு மிவ்வூரிற் றழைக்கு நற்செல்வ !;'

எனக்கூறும் பிசாசாழ்வார் வாக்கை யெடுத்துக்காட்டி இது திருமாலின் பழம்பதியெனக் கூறலும் போலியுரையென மறுக்க. எம் உரையே சாலப் பொருத்தமென்பதனைத் "திருமுருகத்துள்" முருகனார்,

எள்ளியவரோட விளையோனாய் யான்பயின்ற
பள்ளியிந்தப் பள்ளியகரம்"

என இகரச்சுட்டு கொடுத்து இனி தோதல் கண்டு கொள்க.

சிவபெருமான்.

நறுமலர்நங் கையர்க்காகு நமச்சிதுவா மெனமத்த மலரோ டின்னும்
வெறுமலர்கள் விழையவலை மகள்கண்டு தலையேற வெள்கி நிற்குங்
கறைமிடறுங் கணிச்சிகையுங் கண்மூன்று முடையவொரு கடவுள் செய்ய
மறையடியெந் தலையேற்றி மனவலைவு தீர்ந்துபெறு மாண்புற்றுய்வாம்.

குறிப்புரை.

பெண்களுக்கிடங்கொடுத்தார் பேரிடர்ப்படுவாரென்பதனை, நறுமணமிக்கமலர்களையெலாந் தான் விழைந்தணியின் பெண்கள் அவற்றைப் பெறாரெனக் கருதி மணமில் மலர்களையே விழைவானாக, இவ்வெளிமைகண்டு அலைமகள் தலையேறிய செய்தியால் ஈண்டு அறியவைத்தார்.

இருங்கலைநாட்டு ஏகான்மவாதப் பிரதியொன்றில் காணப்பெறும் "பெருமாண்பு" என்னுந்தொடரையே மெய்யுரையெனக் கொண்டு பெரியோர் பலரும் பெரியமாண்பு எனவுரை கூறிப்பேதுற்றார். மாண்பெனப்படுவது, நீட்டல், நிறுத்தல், முகத்தன்முதலிய அளவைகளான் அளக்கப்பெறுவதென எண்ணினர்போலும்! எம்மாதீனப்பிரதியொன்றில் காணப்பெறும் "பெறுமாண்பு" என்பதனையே மெய்யுரையாக் கொள்க. மன அலைவு தீர்தலினாலே பெறுகின்றமாண்பு எனக்கூறிய கந்தமாபாடியத்தையுங் கருத்துட்கொள்க. மனவலைவு தீர்வதே வீடென்பது எம்மாதீனக் கொள்கையுமாம்.

உமையம்மை.

கற்பகக் காவின் கோவுங் கமலநான் முகனு மாலும்
எற்பகத் தருகவேத்த வேன்றநா ளொப்ப வெங்கள்
சிற்பா ணியாவும் விட்டுச் சிறுபலிக் கேகுநாளும்
அற்பகத் தமர்ந்து வாழ்ந்த வன்னைதாள் போற்றிவாழ்வாம்.

குறிப்புரை.

இப்பாட்டு உமையம்மையைப் போற்றுமுகத்தால், வாழ்வினுந் தாழ்வினுங் கொண்டானிடத்துப் பெண்டிர் ஆற்ற வேண்டுங் கடமையைக் குறிப்பித்ததாம். தங்கடைத் தேவரெல்லா நின்றவழி யிருந்த அன்பே யொப்ப, எம்பிரான் பிறர்கடை நின்ற வழியும் உமையம்மையின் அன்பிருந்ததெனக் கூறினர். "யாவும்விட்ட" என்றமையான் வெள்ளியம் பொருப்பும், வால்வெள்ளேறுமாம் தம்முடைமையேயன்றித் தன்னுணமும் மானமும் விட்டானென்றுங்கொள்க. என்றும் பிரியாத வுமையம்மையையும் விட்டானென்றலும் ஒன்று. அவன் தன்னை விட்டகாலத்தும் தான் அவனைவிட்டிலளென்பது கருத்து.

நந்திதேவர்

காளையந் தலையனுகிக் கண்ணுதல் கைலைகாக்குந்
தாளையந் தவத்தோர்க் கெல்லாந் தனிப்பெரும் பேற்றையிந்தப்
பீளைவெம் பிறவிபோக்கும் பெருந்தகை யெங்களையன்
தாளையெந் தலைமேலேற்றித் தவத்தவர் தலைமேல்வாழ்வாம்.

குறிப்புரை.

உருவுந்திருவும் இறைவற்குப் பொருட்டாவனவல்ல என்பது தோன்ற "காளையந்தலையனை" கைலைகாக்குஞ் சிறப்பிலமர்த்திய குறிப்பு இதன்பால் தோன்றுவதாகும். தாள்= முயற்சி. நந்தியம்பெருமான் தாளில் தலைபூட்டி யாரே தவத்தவர்க்குத் தலைமையாயினர் என்பது கருத்து.

பழைமைபாராட்டல்.

பழமைபாராட்டல் என்னும் பகுதியுள் மெய்யறியா முனிவர் தான் கைலைமலையின் பாங்கர் வாழ்ந்துவந்த செய்தியும், ஆங்கோர் நிகழ்ச்சியும், நிகழ்ச்சியான் நீங்கலும் ஆகியவற்றை

"வையகத் துள்ளோர்தங்கள் வாயெலாந் திதிக்க வாழ்த்தி
கையகத் துருகிக் கூப்பும் கயிலைமா மலையின் பாங்கர்"

எனத் தொடங்கும் செய்யுள் முதலாக

"கார்நிற்பன மக்கள்ளுளங் கவிநிற்பன மரமேல்
நேர்நிற்பன பனையின்றிரள் நெறிநிற்பன சாலை"

எனத் தொடங்கும் செய்யுளிறுதியாக இருபது செய்யுட்களுட் கூறுகின்றார். அதன் திரண்டபொருள் பனிமலைப் பாங்கர் பல்வளக்காவும் நல்வளச்செய்யும் நனியியற்றி வாழுநாள், நாயகன் நந்தியம்பெருமான் பயிர் நகையால் முனிவர் இளம்பயிர்ச்

செய் பொன்றை நணுகினனாக, முனிவர் அறியாது புடைப் பாராக, பெருமான் கோடுகொண்டுந்துவானாக, இவரவர் மருப்பினைப்பற்றுவாராக, இருவருமாய்க் கட்டிப் புரண்டு கயிலை யைச் சார, ஆங்கெம் அவிர்சடைப்பெருமான் நிகழ்ந்த துணரானாய் முனிவனைக்காய, முனிவர் அவனைக்காய, அக்காய் தலின் பயனாய் மக்கள் யாக்கையை முனிவரடைய, ஆண்டவன் முனிவன் சாபத்தால் மக்களுள்ளத்தையடைய நின்ற நிகழ்ச்சி களேயாகும்.

நாட்டுப் படலம்

மண்ணாறு பாய்ந்துவளம் பெருகாது மாநிலத்து
விண்ணாறு பாய்ந்துவளம் பெருகுதிரு வியனாடு
தண்ணாறு மதிச்சடிலத் தெம்பெருமான் றழைத்துவளர்.
எண்ணாறு பதிகளொடு வெயிற் பலவுமுடைநாடு.

குறிப்புரை.

இதன்கண் "ஆறே யறனே யரணெனப் படுமொரு மூன்றின் றிறனுந் தோன்றக் கூறினார்" (இஃதுரைப்பாட்டு.) விண்ணாறு கூறவே ஆறும், எண்ணாறுபதிகூற அறனும், எயில்கூற அரணும் பெற்றாம். மண்ணிடை நாடு எனினும் விண்ணொடு தொடர்புடைமையின் மண்ணாறுபாய்ந்து வளங் கொள்ளா தெனக் கூறினார். விண்ணொடு தொடர்புடைமை, முருகன் பள்ளிபயின்றமையானும், நம்முனிவர் பெருந்தகை இவண் பிறந்தமையானும் பெற்றாம்.

வயலெலாங் கள்ளிமுள்ளி வரப்பெலா நண்டுநத்தை
அயலெலா மள்ளர்வீடு அருகெலாம் வம்புசண்டை
கயலெலாங் கடையர்வாய கள்ளெலா மவற்றோரன்ன
புயலுலாம் பொன்னிநாட்டுப் புகழெமாலுரைக்கற்பாற்றோ.

குறிப்புரை.

வயலெலாம் நண்டுநத்தை வரப்பெலாங் கள்ளி முள்ளி யென மாறுக. கயல்கடையர்வாய என்பதொருண்மை; அவற்றையுண்பாரவரேயாகலின். வம்பு சண்டையெனவே காரணமின்றியும் ஒருவரோடு ஒருவர் செருவரென்பது பெற் றாம்.

செய்யருகே வருமேதிதனைச்சினந்து செயிர்நோக்கின்
கையருகே கிடந்திடுகோற் றனைஎடுத்து வெருட்டுமவன்
பையருகே விழவதனிற் பாக்கெடுக்கு முழத்திதனை
வையருகே கௌபறியாய் எனப்புகலு மோருழவன்.

குறிப்புரை.

வயலினருகே வரும் கருமேதி தனை வெருட்டும் உழவனது மடியிலிருந்த பை கீழேவிழ, அவன் திரும்புமுன் அப்பையி லிருந்த பாக்கையெடுக்கும் உழத்தியைக் கண்டு, "பையைவை அறுகு முதலிய களையைப்பறி" யென்று கூறுகின்றான். இது தன்மைநவிற்சியென்னும் அணியின்பாற்படும்.

எலிபெருச் சாளியேய்க்கு மப்பெருச் சாளிநோக்கின்
மலிவுறு பன்றியேய்க்கும் பன்றிதான் மேதிமானும்
கலிபெறு மேதிகண்டார் களிறெனப் புகன்றுநிற்பார்
புலிபெறு சோழநாட்டுப் புழைக்கைதா னியாதோவம்மா.

குறிப்புரை.

இந்நாட்டு வளங்கூறுவான் தொடங்கி, அங்குவாழ் விலங்கு களில் ஒருசார் கூறினர். பறழ்பலவுடைமையின் "மலிவுறு" எனப்பன்றிக்கடைகொடுத்தார். கொடியிலன்றி நாட்டில் புலி யில்லென்பதறிவித்தற்கு "புலிபெறு" என்றார். புலி, புழைக்கை யென்பன முறையே ஆகுபெயரான் கொடியையும், யானையையுமுணர்த்திநின்றன.

கண்டெலாங் கடையிலன்றிக் கன்னியர் மொழியிலல்ல
வண்டெலஞ் சோலையார்க்கும் வனிதையர் கண்ணினேய்க்கா
தொண்டெலாம் பத்திலொன்று குறைவதாற் பெற்றதேயாம்
பண்டெலாம்புலவர் சொன்ன பான்மைதானியாதோவம்மா.

குறிப்புரை.

தொண்டு பத்திலொன்று குறைந்த ஒன்பது. அதைப் பிற்காலத்திலக்கியமாகிய பரிபாடலில் "தொண்டென" வருவ தாலுணர்க. பெரியோர்க்குச் சிறியோர் எனின செய்யார் என்றதைக் குறிப்பித்தபடி. இதனுன் ஆணவக்தலை யெடுத் தமைபெற்றாட். இன் உருபுமயக்கம். கண்டுமுதலியன ஈண்டு முறை பிறழக் கிடந்தமை நோக்கற்பாற்று என்பார் "அம்மா" என்ற வியப்பிடைச்சொல் கொடுத்தோதினர்.

வைரவோபநிடதப் படலம்

நமது முனிவர் பெருமானர், இப்படலத்து நாய்முனிவன் நன்னெறி பெற்ற வரலாறும், அவனது தீக்கைமுறையும், நல்லுரையும் எடுத்தோதுவாராயினர்.

வணங்குவார் வாழவைக்கும் வள்ளலார் செய்யபாதம்
சுணங்கனார்முன்புபூசித் தரும்பதஞ் சொற்றவாறு
கணங்களார்முனிவர் கேட்பக் கனிந்தருள் சுரந்துநந்தி
இணங்கினர் சொற்றவாறு மின்று நா மியம்புவாமே.

குறிப்புரை.

மெய்யறியாமுனிவர், திருநந்திதேவராது நேர்மாணக்க ரென்பது இச்செய்யுளின் அகச்சான்றாலறிக. முனிவர் கூட்டங் கொண்டதைக் கணங்களார் முனிவர் என்றார்.

ஒருப்படா வுள்ளமன்ன வோடியே வுணவுநாடித்
தெருப்படா தெல்லையேகித் தெளிவிலார் தின்றவூனின்
வறுப்படா நல்லியென்பு வகைபல கடித்துப்பின்பு
வெறுப்படா வாழ்க்கையென்று வீதிவாய்நின்றவேந்து.

குறிப்புரை.

வீடடைதற்கு உள்ளத்தின் ஒருமையே வேண்டப்படுவ தெனக்குறிப்பித்து, நாய்முனிவன், நாட்டின் அலைந்து திரிந்ததை "ஒரு...........மன்ன" எனவுவமித்தார். ஓடுதலுந்தேடுதலுமே கூறினான்றிப் பெற்றானெனக் கூறினாரில்லை. பெறுதலவனரு ளாகலின்; "தெருப்படாதெல்லை" என்றது கொல்லைப்புறத்தை, நாய்முனிவன் செல்லுநெறி யதுவேயாகலின், "வீதிவாய்நின்ற" என்பது முனிவனது பின்னிலையை. தன்முயற்சியான் ஒன்றும் பெறுதவழி பிறரேதேனு மீவரோவென நின்றநிலையை என வுணர்க. "வறுப்படா நல்லியென்பு" என்பது அஃதொன் றன்றிப் பிறிதெல்லாம் மக்களுட்கொண்டிருப் பாராகலின். "வெறுப்படா வாழ்க்கை" என்பது நாய்முனிவன் கூற்று, வாழ்க்கையை வெறுத்துக்கூறுகிறானாகலின். ஊர்காவல் புரிந் தொழுகின்றமையின் "வேந்து" என்றார். காவல்புரிந்தொழுகுந் தொழில் மண்ணுலகுக்கன்றி விண்ணுலகுக்குமொக்கும் எங்ஙன மெனின் :—

[இடையே சில செய்யுட் காணப் பெற்றிலம். செல்வாய்ப் பட்டுச் சென்றன போலும்]

கூடல்குள மங்கலநற் குறுங்களூ ரென்னுமுயர்
பாடல்பெறு பதிபலவுஞ் சூழ்பள்ளி யகாநகர்
ஆடலுகந் தப்பதியி னுயிரமா மெனக்கேட்டு
நாடலுறு வானெமது நாய்முனிவன் நல்வினையால்.

குறிப்புரை.

பல்வழியலைந்து நல்வினைதூரப்ப நாய்முனிவன் அடைந்த நகரையும் அதனைச் சூழ்ந்த சிலவூரையுங் குறிப்பிட்டார். ஆட லுகந்த பதி தில்லை. அதினினுயிரமென்றது அதைவிட ஆயிர மடங்குயர்வுடையது இப்பள்ளிமாநகர் என்பது கருத்து. ஒரு சில மாறுபாடுடையார், வீசம்பங்கே யுயர்ச்சியென்று கூறுவர். அதற்குச் சான்ருகவன்னோர்,

> காசியில் வீசம் தில்லை யதனினும் வீசம்பள்ளி
> மாசிலா மூதூரென்று மறைமொழி போற்றிநிற்ப''

என்னும் வைரவாகமப்பகுதியைக் காட்டுவர்.

> நற்றவத்தால் நாய்முனிவன் நாடியவந் நகர்முழுதும்
> கற்றவரும் கற்றவரைக் கண்டவரும் காணுமல்
> பெற்றமுகந் தேறுமொரு பிஞ்ஞகனுர்க் கிந்நிலையோர்
> உற்றவரேல் யானுய்ய உறுதியிலை யோவென்பான்.

உரை :— அந்நகர்க்கண் கோயில் கொண்டெழுந்தருளும் பெருமான் றன் றிருவுருவம் மக்கள் உருவினதாய்க் கண்ட முனிவன், அந்தோ! மக்களே வீடடைதற்குரியார்போலும் எமக்கப் பரிசில்லையோ எனக்கவலுவான் அந்நகர் மக்களைக் காணுந்தோறும். கற்றல் கேட்டலென்பன அவர்கண்ணுந் தன் மாட்டும் ஒருதன்மையவாய் நிற்றலின் தானும் வீடடைதல் துணிவெனக்கருதிப் பின்னர் ஆண்டவன் அடிகாண்பான் நோக்க, ஆண்டு கண்டான் பெற்றம்; பெற்றமுகந்தான் என்னையு முவப்பான் என இறும்பூதெய்தும்.

> பித்துடைய பெருமாற்குப் பேதையொரு துணையாயின்
> பத்துடையார் தொழமகிழும் பரம்பரனைப் பாடுவனேல்
> எத்துணையோ மகிழுமவன் எதிர்நிற்பா ரில்லையெனக்
> கத்துவதும் கண்டவரைக் கடிப்பதுமாய்க் கழிப்பான்நாள்.

உரை :— ஆண்டவன் பித்தன்; யானுமதுவே. பித்தற்குத் துணையோ பேதை. சூழ்ந்தார் பத்துடையார். இந்நிலையில் யான்பாடில் அவன்மகிழும் எனத்தன் இன்குரலால் ஏத்தெடுப் பான். எய்த்தவழிப் பிறரும் ஏத்தெடுக்க வேண்டி மக்களை யணுகிப் பற்பணி செய்வான். இப்பற்பணியே பிற்காலத்துத் தந்ததீக்ஷை என வடமொழியினும் பற்கழுவாய் எனத்தென் மொழியினும் வழங்குவதாயிற்று. மந்திர இலக்கணமுணர்ந் தோர் மாசுநீக்கி வீடுபயக்கும் தீக்கைகளுள் தந்ததீக்கை விரைவுடையதெனக் கூறுவர். நந்திதேவர்

"மந்ததீக்கை மற்றுள்ள தீக்கையாற்
பந்த மோக்கப் பதம்பெறப் பாரினில்
தந்த தீக்கை தகவுடைத் தீக்கையென்
றந்தி வெண்பிறை யைய னறைந்தனன்"

எனக் கூறுவதும் ஈண்டு கருதற்பாலது.

கலியின் கொடுமை நிரம்பிய இக்காலத்தும் வயிரவ முனிவரது தந்ததீக்கை அருளப்பெற்றால் மலைச்சாரலிற் சென்று பந்தப்படுதலானும் அவ்வாறு பந்தப்பட வொருப்படார் நேரே துறக்கமெய்தலானும் மேற்செய்யுளின் உண்மை நன்குணரலாகும். முனிவர் வாக்கு முக்காலமும் நிலைநிற்குமன்றோ?

நாய்முனிவன் நல்லுரை

கள்ளம் அறியா வுள்ளத் துறைவே
வள்வெள் வள்வெள் வெள்வள் வெள்வள்

உரை:—வள்வெள் என்னுந் தொடரை வள்ளெனவும் வெள்ளெனவும் பிரித்து உள்ளம் முதலிய சொற்களொடு கூடிப் பொருள் காண்க. வள்உள்ளம் வெள் அறியா என இவ்வாறு பன்னூறுகூட்டிப் பொருள் காண்பர். பின்னிரண்டடி நாய்முனிவனது ஒலிக்குறிப்பு. இவை மறை, பிற்காலத்துப் பரிபாட்டுள்ளும் ஏ எனுஞ் சொல் ஒலியாய் மறையெனும் பொருளதாயிற்று. நாய்முனிவன் இவ்வாறு கூறியதைக் குரைத்தலென்னுஞ் சொல்லானும் விளக்குவர். "குரையென் கிளவி மறையுமாகும்" என்றார் பிறரும். அறிவுமேம்பட்டோ மெனக்கருதி ஆராய்ச்சியெனும் பெயரால் தம்முளங்கொண்டதெல்லாம் பிதற்றும் அறிவிலிகளிற் சிலர் நாய்முனிவன் எம்பிரான் திருவருளிற் றிளைத்துக் குரைத்தானல்லன் ஆண்டவன் திருமுடியின் திங்கள் கண்டே குரைத்தானெனக் கூறுவர். அந்தோ மடமை! இதுகொள்ளற்க.

இவ்வருள்நூல் அரங்கேறியகாலத்து சிவபெருமான் திருமுன்பு தமிழன்னை கூறியது.

பொய்மலி புராணம் போதும்! புகழ்மலி யருணா லொப்பக்
கைதவக் கயவராக்கும் கவியெலாம் போதும்! போதும்!!
உய்வதற் குறுதி யுண்டேல் உலகுவாழ் உயர்நூ லெல்லாம்
செய்கமுத் தமிழோ டான்ற அறிவுநூல் உரைநூல் செய்மின்.

உரையாசிரியர் கயவமாமுனிவர் கூறிய வாழ்த்து.

போலி யொழிக புதுநூல் பலவெழுக
கால வுணர்ச்சி கவின்பெறுக—மேலுமினி
மெய்யறியான் மண்மேல் பிறவா வருள்தருக
வையகமெல் லாம்வாழ்க வே.

தமிழ்ச் செய்திகள்.

ஈழநாட்டு வித்துவான், திருவாளர். கணேசய்யர் அவர்களின் 60 ஆண்டு நிறைவு விழா :— யாழ்பாணம், வண்ணை, வைத்தீசுவர வித்தியாலயத்தில் 8—10—1938 யன்று இனிது நிறைவேறியது. திருவாளர் முகாந்திரம், **கந்தையா அவர்கள்** தலைமையிருந்தனர். உயர்திரு. சுவாமி விபுலானந்த அடிகள், உயர்திரு. சுவாமி, ஞானப்பிரகாசர் அவர்கள், திரு. சு. நடேச பிள்ளை அவர்கள் B A. B L, (M.S.C.), ஈழகேசரிப் பத்திராசிரியர், திருவாளர், நா. பொன்னையா அவர்கள் உள்ளிட்ட பேரறிஞர் பலர் விழாவைச் சிறப்பித்தனர். ஐயரவர்களின் தமிழ்ப்புலமையையும் தமிழ்த்தொண்டின் சிறப்பையும் பலபடியாகப் பாராட்டிப் பொற்கிழி அளித்தனர்.

ஐயரவர்கள், இரகுவமிசம், மேகதூதக் காரிகை, தொல்காப்பிய எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்) சொல்லதிகாரம் (சேனாவரையம்) ஆகிய நூல்கட்கு உரைகள் இயற்றியும், குமாரசாமிப் புலவர் சரித்திரம், குசேலர் சரிதம், ஈழநாடுந் தமிழும் என்ற உரைநூல்கள் எழுதியுமிருக்கின்றனர். தொல்-பொருளதிகாரம் (நச்சினார்க்கினியம்) முதல் ஐந்து இயல்கட்கும் (பேராசிரியம்) நான்கு இயல்கட்கும் இப்பெரியார் இயற்றிய உரைநூல்களின் வெளியீட்டைத் தமிழ்நாடு எதிர்நோக்கி யிருக்கின்றது.

பண்டைக் காலத்தே முடியுடை வேந்தரும், குறுநில மன்னரும், பெருஞ்செல்வரும், தமிழ்ப் புலவர்களைப் பேணி வந்தனர் ; ஆதலால் கலைகள் மலிந்தன. பிற்றைநாளில் அயல் நாட்டினரின் ஆளுகையில் தமிழ்நாடு அகப்பட்ட காலம்முதல் இதுகாறும் அயன்மொழிகளையே அரசியலார் போற்றி வளர்க்கத் தலைப்பட்டனர். அரசியற்றுறையில் பெரும்பதவிகளைநாடி அலையும் தமிழ்நாட்டு மாந்தரும், அரசியற்றலைவர்களின் மொழியைவளர்க்கவும், அன்னவரின் நடைஉடைகளை மேற்கொள்ளவும் தலைப்பட்டு, தமது பிறப்புரிமையாகிய தாய்மொழியைப் புறக்கணித்தும், அடிமை வாழ்வில் தாழ்ந்தும், பிழைக்க வழிதேடி வருகின்றனர். தமிழ்ப்புலமை நிரம்பிய அறிஞர்களும், தமிழருக்குரிய கலைச்செல்வங்களும் போற்றப்படாது போகவே, தமிழ்வளங்குன்றி, தமிழாகிய வான்பயிர் வாடித் தளர்நிலை எய்துகின்றது.

இந்நிலையை உணர்ந்துவைத்த ஈழநாட்டுத் தமிழறிஞர் நற்றமிழ்ப் புலவராய ஐயர் அவர்களின் தொண்டின் சிறப்பைத் தமிழகம் அறிந்து நன்றிகூறும் பொருட்டும், தமிழ்ப்புலவர் அனைவரையும் தமிழ்த்தொண்டில் ஊக்குதற் பொருட்டும், இவ்விழாவெடுத்தும், புலவரவர்கட்குப் பொற்கிழி தந்தும் சிறப்பித்தது, யாம் பாராட்டுதற்குரிய அருஞ்செயலாம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

நாளது வெகுதானிய, ஐப்பசி, எ, (23—10—38)-ம் நாள் ஞாயிறு மாலை ரு மணிக்குக் கரந்தைத் தமிழ்ப் பெருமன்றத்தில் கும்பகோணம் வாணுத்துறை உயர்தரப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர், புலவர் திருவாளர், தி. வை. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள் ''சோழர்களும் தமிழ் மொழியும்'' என்பதுபற்றி ஓர் அரிய விரிவுரையாற்றினுர்கள். அவர்கள் ஆற்றிய விரிவுரையின் சுருக்கம் வருமாறு:—

"சோழர்கள் தமிழ்ப் பழங்குடியினர். தமிழைப் போன்று சிறப்பு"ழ" கரம் பெற்ற பெயருடையவர். இவர் தம் தொன்மைக்கால எல்லை காண்டலரிது. பழந்தமிழிலக்கண நூலாசிரியரான தொல்காப்பியனுரே, "வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பின்," "போந்தை வேம்பே ஆரென வருஉ மாபெருந் தானையர்" என்ற சூத்திரங்களால் இச்சோழவரசர்களையும் அவர்தம் மாலையாகிய ஆத்தியினையும் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் தமிழைப் போற்றுவதிற் பாண்டியரின் பிற்பட்டவரல்லர். புலவர் புலமையறிய அரசரும் புலவராதல்வேண்டும். பாண்டியருட் கவியரங்கேறினுரைப்போன்று சோழரும் புலமை பெற்றிருந்தனர். கடைச்சங்கநாளிற் றெகுக்கப் பெற்ற தொகைநூல்களில் சோழன் நலங்கிள்ளி, குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், நல்லுருத்திரன் முதலிய சோழ மன்னர்களாற் பாடப்பெற்ற பாக்கள் பலவுள. கற்றறிந்தாரேத்துங் கலித்தொகையுள் முல்லைத்திணையைப் பாடியவர் சோழன் நல்லுருத்திரன் ஆவார். "படையுங் கொடியு" மென்ற தொல்காப்பியச் சூத்திரத்துள் வேந்தரது பூவைப் போர்ப்பு, தார்ப்பூ என இருவகையாகப் பிரித்து சோழரது போர்ப்பூ ஆத்தியெனவும் அவரது தார்ப்பூ முல்லையெனவும் கூறுவர். அதனுரையாசிரியரான பேராசிரியர் அத்தகைய தார்ப்பூவாகிய முல்லைப்பூ பயின்றது கருதி இவ்வரசர் முல்லைத்திணையைப் பாடினுர் போலும். சோழர் புலவராயிருந்து தமிழை வளர்த்ததோடு புலமை மிக்கோரியற்றிய நூல்களையும் போற்றி அப்புலவர்களைப் போற்றினுர்கள். கரிகால் வளவனுகிய பெருவேந்தன் பட்டினப்பாலையென்னும் நூலை இயற்றிய ஆசிரியருக்குப் பதினுறு நூருயிரம் பொன்னளித்துப் போற்றினமை காரணமாகக் கலிங்கத்துப் பரணியிற் புகழப்படுகின்ருன். பொருநராற்றுப்படை

யென்ற நூலும் இவனைப் பற்றிப் பாடப் பெற்றதே. ஆகவே பத்துப்பாட்டு என்னுந் தொகைநூலுள் இரண்டு சோழருடையனவென்பது புலனாம். பாண்டியர்மேற் பாடப்பெற்றனவுமிதன்கணிரண்டேயுள. சோழன்கோச்செங்கணான் சேரனாகிய கணைக்காலிரும்பொறையைச் சிறைப்படுத்தியபொழுது பொய்கையார் என்ற புலவர் செங்கணானைக் களவழிக் கவிதையாற் பாடிச் சேரமானைச் சிறைவீடுசெய்தார். கோச்செங்கணான் என்ற சோழன் இவர் பாடிய நூலைக்கேட்டுத் தன் பகைவனைச் சிறையினின்றும் விடுவித்ததனால் அவனது தமிழ்ப் பற்று நன்கு புலனாகின்றது. பண்டைச் சோழர்கள் தனித் தமிழையே வளமுற வளர்த்தனர். பிற்காலச் சோழர் பல்லவராட்சியிற் பட்டுப் பிறமொழியை மிகுதியாக வழங்கினர். கி. பி. 750-ல் சோழநாடு பல்லவர்பாற்பட்டது. பல்லவர்கள் வடமொழி யார்வத்தால் கோயிற்பூசனையில் அதனை நிலைநிறுத்தினர். அவரது ஆட்சியில் மதச்செயல்களே மல்கின. மதங்கருதிவந்த சமணர் முதலாயினோரும், 7, 8-ம் நூற்றாண்டுகளில் தமிழை வளம்படுத்தினர். விசயாலயனுக்குப்பின்வந்த ஆதித்தசோழன் காலத்தும் பராந்தகசோழன் காலத்தும் தேவாரத் திருமுறைகளைக் கோயில்களிற் பாடற் கேற்றசெவ்வி யளிக்கப்பட்டிருந்தது. பின்னர் முதலாம் இராசராச சோழதேவரால் சைவத் திருமுறைகளிற் பதினொன்றும் கண்டு முறைப்படுத்தப் பெற்றன. இவன் காலத்துக் கண்டராதித்த சோழதேவரும், அவருடைய மனைவியார் செம்பியன் மாதேவியாரும் தமிழுடன் சமயத் தொண்டிலீடுபட்டுச் சைவத்திருமுறைகளை யெங்கும் பரப்பினார்கள். இக்காலத்தே இராசராசேசுவர நாடகம், இராசராசவிசயம் ஆகிய தமிழ் நூல்கள் தோன்றின. இராசராசன் மகனும் பண்டிதசோழனும் ஆகிய கங்கைகொண்ட சோழன் காலத்தில் கருவூர்த்தேவர் என்பவர் திருவிசைப்பாவினைப் பாடியுள்ளார். இவன் காலமுதற்கொண்டு முதற் குலோத்துங்கன் காலம்வரை மேலைச் சளுக்கியரோடு சோழர்கள் ஓயாது போர்புரிய வேண்டியிருந்தமையால் புதிதாக நூல்கள் தோன்றுவதற்கியைபில்லாமற் போயிற்று. வீரராசேந்திர சோழன் காலத்து அவ்வரசன் வேண்டுகோட்கொண்டு பொன்பத்திக் காவலன் புத்த மித்திரன் என்ற ஆசிரியர் “வீரசோழியம்” என்ற இலக்கணநூலை இயற்றினார். தமிழில் ஐந்திலக்கணம் அமைந்த நூலாக முதன்முதற்றோன்றியது இந்நூலேயாம். அன்றியும் இவன் காலத்துத் திருவாரூரில் வாழ்ந்த புலவரொருவரால் வீரசோழ அனுக்கவிசயம்

என்ற இலக்கிய நூலுமியற்றப் பெற்றது. பின்னர் வந்த முதற்குலோத்துங்க சோழன் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மும்மொழியினும் வல்லவன். இவன் தன் அம்மானுகிய வீரராசேந்திர சோழனது உதவியைப் பெற்றான். இவன் காலத்துப் புலவராய சயங்கொண்டார் இவனது கலிங்கத்து வெற்றியைக் கலிங்கத்துப் பரணியாற் பலபடப் பாராட்டி யுள்ளார். இவர் சோழரது பெருந்திறலையும் பிறஉயர் பண்புகளை யும் அந்நூலின் இராச பாரம்பரியத்திற் கூறியுள்ளார். கம் பருக்குப்பின் கவிச்சக்கரவர்த்தி யென்ற பட்டத்தைப் பெற்ற வர் இவரே. இவர் பாடிய பரணியினை ஒட்டக்கூத்தர், குலோத் துங்கன் பிள்ளைத் தமிழில் பாடற்கரும்பரணி தேடற்கருங்கவி எனப் பாராட்டியதோடு இவரைக் கவிச் சக்கரவர்த்தி யென்றும் புகழ்ந்து போற்றுகின்றார். விக்கிரமசோழன் ஆட்சியில் கூத்தர் இளம் புலவராக இருந்தார். இவர் அவனது ஆருவதாட்சி யாண்டில் 'விக்கிரம சோழனுலா' வைப்பாடியிருத்தல் வேண்டும். இவனால் பூந்தோட்டத்திற்கடுத்த கூத்தனூர் என்பது கூத்தர்க் குக் கொடுக்கப் பெற்றது. இவர் காலிங்கராயன் அரும்பைக் கூத்தனைப் பற்றி "அரும்பைத் தோள்ளாயிரம்" என ஒன்று பாடி யிருக்கிறார். அது கிடைத்திலது. காலிங்கராயனுகிய இவன் சயங்கொண்டார் காலத்திலிருந்து விக்கிரமனது ஆருவதாட்சி யாண்டு வரையிலும் அரசியல் வினையியற்றிப்பின்னர் ஓய் வெடுத்துக்கொண்டவன். இவன் இருவராலும் பாடப் பெற் றுள்ளான். ஆதலால் சயங்கொண்டார் காலத்தில் கூத்தரு மிருந்திருப்பர் எனக் கருதலாம். கூத்தர் காலத்து விக்கிரம சோழனால் தென் கலிங்கப்போர் நடத்தப் பெற்றது. அது பற்றி இவர் பரணி பாடியதாகவும் தெரிகிறது. விக்கிரமன் பேரன் இரண்டாம் ராசராசன் காலத்து இவரியற்றிய "தக்க யாகப்பரணியில்" விக்கிரமனைப் பற்றி இவர் பாடிய தென் கலிங்கப் பரணி குறிப்பிடப் பட்டுளது. அடியார்க்கு நல்லார் எடுத்துக் காட்டிய தாழிசையுட் சில இப்பரணியினைச் சேர்ந்தன வாகலாம். கூத்தர் இரண்டாங் குலோத்துங்கனைப் பிள்ளைத் தமிழுலா ஆகியவற்றால் பாராட்டியுள்ளார். விக்கிரமன் காலத்துச் செஞ்சியை யாண்ட சிற்றரசனுகிய செஞ்சியர் கோன்காடவன் என்பவன் விக்கிரமன் காலத்துச் சாசனத்தில் கையெழுத்திட்டுள்ளான். இவனைச் செஞ்சிக் கலம்பகத்தாற் போற்றியவர் புகழேந்திப் புலவர். ஆதலால் கூத்தரும் புக ழேந்தியும் ஏறக்குறைய ஒரு காலத்தவராகலாம். இரண்டாங் குலோத்துங்கனுக்குப்பின் அவன் மகன் இரண்டாம் இராச

ராசன் பட்டத்திற்கு வந்தான். தன் தந்தையைப்போன்று தமிழார்வமுடையவனுகயிருந்தான். இவன் இவனது மெய்க் கீர்த்தியில் முத்தமிழ்க்குந் தலைவனெனவும் முடிசூடு மிராச பண்டிதனெனவும் புகழப்படுகின்ருன். இவனைப்பற்றிய உலா வாகிய இராசராசனுலாவும், ஈட்டியெழுபதும் இவன் காலத்துக் கூத்தராற் பாடப்பெற்றன. வீழ்ந்த அரிசமயத்தை எடுத் தவன் இவனே, இவனைப்பற்றிய உலாவில் கண்ணியொன்றற்கு ஆயிரம் பொன் கூத்தற்களித்தான் என்பர் சங்கர சோழனுலா வுடையார். இவனுக்குப்பின் 1162ல் இரண்டாம் இராசாதி ராசன் பட்டம்பெற்ருன். இவன் திருவொற்றியூர்க் கோயிலுட் சென்றபொழுது வாகீச பண்டிதரென்பவர் எதிர்கொண்டழைத் தார் என்பது சாசனத்துட் காணப்படுகிறது. இவ்வாகீச பண்டி தர் என்பவரே ஞானமிர்தம் என்னும் சைவசித்தாந்த சமய நூலையியற்றியுள்ளார். இந்நூல் சங்கச்செய்யுளின் நடையை யுடையது. சிவஞான முனிவராற் பாடியத்தில் பாராட்டப் பெற்றுளது. பின்னர் வந்த மூன்ருங் குலோத்துங்க சோழன் காலத்துத்தான் சேக்கிழாராற் பெரிய புராணம் பாடப்பெற்ற தென்பது என் கருத்து. அதுபற்றிய காரணம் பலவுள. இன்னும் இவன் காலத்திலேயே நன்னூல், வச்சணந்திமாலை, வெண்பாப்பாட்டியல், நேமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் இயற்றப்பெற்றன. குமார குலோத்துங்கன் கோவையென்பது இவனைப் பற்றியதே. இவன், இதன்கண் "தமிழ்வாணர் தெய் வக்கவியா வாணன்" என்ருங்கு சிறப்பிக்கப்படுகின்ருன். திரி புவனம் திருவிடைமருது முதலிய பெருங்கோயில்களெல்லாம் இவன் காலத்துத்தான் எழுந்தன. அறுபான் மும்மையடியார் களைக் கோயில்களில் எழுந்தருளுவித்தவன் இவனே. தமிழை வளர்த்த சோழமன்னர்களில் இவனே பிற்காலத்தவனெனலாம். இவனுக்கு பிற்பட்ட சிற்றரசர் தமிழைவளர்த்திலர். இடைக் காலத் தமிழரசர்களில் பரணி, உலா, பிள்ளைத்தமிழ், கோவை முதலிய பிரபந்தம் பெற்றுப் புலவர்களைப் போற்றித் தமிழை வளர்த்தவர் சோழர்களே. பாண்டியர்களைவிடச் சோழர்களே பிற்காலத்துத் தமிழ் வளர்ச்சியி லீடுபட்டவரென்னலாம்" என்பதாம்.

பின், அமைச்சர் அவர்கள் விரிவுரையாளருக்கு நன்றிகூறக் கூட்டம் இனிதே நிறைவேறியது.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

ஒரு வேண்டுகோள்

தமிழ்ப் பெருந்தகையீர்,

நலம், எம் சங்கம் சென்ற இருபத்தேழாண்டுகளாகத் தமிழகத்தே இடையறாது இயன்றவாறெலாந் தமிழ்த் தொண்டாற்றி வருவதை இவ்வுலகு நன்குணரும். அண்மையில் நிகழ்ந்த எம்சங்க வெள்ளிவிழாவன்று தமிழாராது நூற்கலை, கவின்கலை, தொழிற்கலை ஆய பலவும் நம் தாய் மொழியிலேயே பயிலுதற் கேற்ற ஒரு தமிழ்க் கல்லூரி நிறுவி நடாத்தி வருகின்றது.

எந்நாட்டினும் எவ்வகை இயக்கமும் அந்நாட்டவர்தம் கூட்டுறவின்றி எட்டுணையும் இயங்காது என்பது ஒருண்மைச் செய்தியாம். ஊர்கள் தோறும் தமிழ்நலங்கருதி யமைக்கப் பெற்றுள்ள கழகங்களிற் பல, தனித்திருந்து வளர வியலாது தடுமாற்றங் கொள்கின்றன. அத்தகைய கழகங்கள், ஒரு தாய்ச் சங்கத்தின்பால் தொடர்பு பெறின் அவை பெரு வளனுறுவது திண்ணம். ஆதலால், தமிழ்க் கழகங்கள் பலவும் எம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைக்கப் பெறுமாயின், அக்கூட்டுறவினால், இயற்றத்தகும் பெருமுயற்சிகளை மேற்கொண்டு முடிக்கக் கூடும். தமிழின் ஆக்கத்திற்கான திட்டங்களை ஏற்படுத்தவும், மேற்கொள்ளும் வேலைகளில் ஒவ்வொரு கழகமும் பங்குகொண்டு உழைக்கவும், தமிழ்த் துறையில் பணியாற்றிவரும் அன்பர்கள் நெருங்கிய தொடர்பு கொள்ளவும் கூடும். இத்தகைய முயற்சிகளால் தமிழகமும் பெரும் பேறடையும்.

நம்தமிழகத்து ஒவ்வொரு தமிழ்க் கழகமும், ஆண்டொன்றுக்கு வெண்காசு மூன்று (ரூபா, ௩) தந்து எமது கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைத்துக் கொண்டால், சங்கத்துத் திங்கள் வெளியீடாகும் தமிழ்ப் பொழிலை விலையின்றியும், மற்றைய சங்க வெளியீடுகளை அரை விலைக்கும் பெறலாகும். மற்றும் ஆண்டு தோறும் தன்னுறுப்பினருள் ஒருவரைக் குறித்தபோது ஈண்டனுப்பி, தமிழ்ப் பணிக்கு அவ்வப்போது குறிப்பிடப்பெறும் வகையில் இயன்றவாறெல்லாந் துணையாயமைகின்ற ஆற்றலினையும் பெறுகின்றது.

எனவே, எமது கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் தங்களது சங்கத்தையும் இன்னே இணைத்துத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தங்களது உளமார்ந்த மறுமொழியை ஆவலுடன் எதிர்நோக்குகின்றேன்.

தங்களன்பன்,
த. வே. உமாமகேசுவரன்,
தலைவர்.